விலை சதம் 5

முதற் பதிப்பு

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.

# சுதந்திரன்

# THE "SUTANTIRAN."

TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
3 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா " 12-00
1 வருடச் சந்தா " 24-00
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
Phone: 3411

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

தாமரைக்கும் குடியல்லேம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து வரு மாகழி மீ 15 உ செவ்வாய்க்கிழமை — Colombo, December, 30 1947 — ஹிஜிரி 1367 ஸபர் பிறை 17 | இதழ் 208

# புதுடில்லியில் இந்தியா, இலங்கைப் பிரதம மந்திரிகள் சந்திப்பு

## இரண்டு மணிநேரம் சம்பாஷணை

### இலங்கை வாழ் 8 லட்சம் இந்தியரின் அரசியல் அந்தஸ்து, குடியேற்றம், இந்தியா- இலங்கை பாதுகாப்பு பற்றி விவாதம்

### இன்றும் இருவரும் சந்தித்துப் பேசுவார்கள்

புதுடில்லி, டிச. 28

இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு இன்று பகல் 10 மணிக்கு இலங்கையின் பிரதம மந்திரி திரு. டி. எஸ். சேனநாயக்காவைச் சந்தித்தார். இந்திய - இலங்கைப் பிரச்னைகளைப் பற்றி இருவரும் இரண்டுமணி நேரம் சம்பாஷித்தனர். இலங்கைவாழ் 8 லட்சம் இந்தியர்களின் அரசியல் அந்தஸ்து, இலங்கையில் இந்தியர் குடியேற்றம், இலங்கை - இந்தியா பாதுகாப்பு ஆகிய விஷயங்களைப்பற்றி அவர்கள் விவாதித்தார்கள் என்று தெரிகிறது. நாளை மீண்டும் சந்தித்துப் பேசுவார்கள்.

### 2,300 வருடத்திய உறவு மீண்டும் ஸ்தாபிதம்

சாஞ்சி, டிச. 27

பௌத்த உலகிற்கும் முக்கியமாக இலங்கைக்கும் சாஞ்சிக்குமிடையேயுள்ள 2300 வருடத்திய பந்தம் இன்று மீண்டும் ஸ்தாபிதமாயிற்று. புத்தபிரானின் இரு பிரதம சீடர்களான சாரிபுத்தா, மஹாமொக்கலானா ஆகியோரின் அஸ்திகளின் ஞாபகச் சின்னமாக அமைக்கப்படும் செட்டியாகிரி விஹாரையின் அஸ்திவாரக்கல் நாட்டுவிழா இன்று பிற்பகல் சாஞ்சியில நடைபெற்றது. போபால் சமஸ்தானத்திற்குள் சாஞ்சி இருப்பதால் போபால் நவாப் அஸ்திவாரக்கல் நாட்டினார். விழா வைபவத்திற்கு மகாபோதி சங்கத்தின் இலங்கைப் பிரதிநிதிகளும் இந்தியா பிரதிநிதிகளும் மற்றும் ஏராளமான பிரமுகர்களும் வந்திருந்தனர். இலங்கையின் பிரதம மந்திரி திரு டி. எஸ். சேனநாயகா, இலங்கை நிதிமந்திரி திரு ஜே. ஆர். ஜெயவர்தனா, இந்தியாவிலுள்ள இலங்கை அரசாங்க பிரதிநிதி திரு டபிள்யு. எச். டி. சில்வா, போபால் சமஸ்தான பிரதம மந்திரி, போபால் சமஸ்தான நிர்வாகசபை அங்கத்தினர்கள், போபாலிலுள்ள பிரபல அதிகாரிகள், பிரமுகர்கள் முதலியோர் விஜயம் செய்திருந்தார்கள். போபால் மன்னர் பழைமைப்பிரதாய முறைப்படி கொட்டு முழங்க பெரிய சாஞ்சி ஸ்தூபியினருகே போடப்பட்டிருந்த அலங்காரமான ஆசனத்திலமர்ந்தார். அப்பொழுது போபால் வெளிநாட்டு மந்திரி குரைஷி பௌத்த தூதுக்கோஷ்டியைச் சேர்ந்த 11 அங்கத்தினர்களை அறிமுகம் செய்து வைத்தார். அத்தூதுக் கோஷ்டியில், இலங்கை மகாபோதி சங்கத்தின் தலைவர் டாக்டர் பி. விஜரண்ணா, இந்தியா மகாபோதி சங்கத்தின் கூட்டுக் காரியதரிசி பூஜ்யர் எம். தங்க ராதா, ராஜா ஹேவாவிதாரண இந்திய மகாபோதி சங்கத்தின் பொதுக் காரியதரிசி டாக்டர் அரசன் தாபருவா, இலங்கை மகாபோதி சங்கத்தின் ஸ்தாபகரான அநகரிகா தம்மபாலா வின் மருமகனான தயாஹேவா விதாரண முதலியோர் இருந்தனர்.

### நேரு ரஷியாவுக்கும் விஜயம் செய்யலாம்

ஸ்ரீமதி பண்டிட் பேட்டி

கராச்சி, டிச. 26

தாம் மாஸ்கோவை விட்டு அமெரிக்காவில் ஸ்தானிகராகவோ அல்லது பிரிட்டனில் இந்திய ஹை கமிஷனராகவோ செல்லப் போவதில்லை. இம்மாதிரி வதந்திகள் தவறு என்று ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் பத்திரிகா நிருபருக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

பண்டித நேருவின் லண்டன் விஜயம் பற்றி இன்னும் முடிவாகவில்லை என்றும் அப்படி நேரு லண்டனுக்கு விஜயம் செய்தால் ரஷியாவுக்கும் விஜயம் செய்வார் என்றும் ஸ்ரீமதி பண்டிட் கூறினார்.

ஸ்ரீமதி பண்டிட் ஒரு ரஷிய விமானத்தில் மாஸ்கோவுக்கு திரும்பிச் செல்லுகிறார்.

### சோமசுந்தரபாரதியார் தேக அசௌக்கியம்

மதுரை, டிச 27

ஸ்ரீ எஸ். லக்ஷ்மீரதன் பாரதி பின்வருமாறு அறிவிக்கிறார்:-

பசுமலை அட்வகேட் நாவலர் ச. சோமசுந்தர பாரதியை முற்றிலும் ஓய்வெடுக்குமாறு டாக்டர்கள் பணித்திருப்பதால் அவர் எவ்விதமான அலுவல்களிலும் கலந்துகொள்ள முடியாதவராகவும் அவர்களுக்குப் பதில் எழுத முடியாதவராகவும் இருக்கின்றார். எனவே அவருடைய நலம் விரும்பும் நண்பர்கள் அவரிடமிருந்து எத்தகைய பணிகளையோ பதில்களையோ எதிர்பார்க்கமுடியாது.

### அகில இந்திய மாணவர் பெடரேஷன்

பம்பாயில் ஷேக் அப்துல்லா ஆரம்பித்து வைப்பார்

கான்பூர், டிச. 25

அகில இந்திய மாணவர் பெடரேஷனின் 11-வது வருஷாந்திர மகாநாடு பம்பாயில் டிசம்பர் 29-ம் தேதியிலிருந்து ஜனவரி 2-ம் தேதிவரை நடைபெறும். பரேல் காம்கார் மைதானத்தில் பெரிய அணிவகுப்பில் மகாநாட்டை ஷேக் அப்துல்லா ஆரம்பித்து வைப்பார்.

காஷ்மீர் மாணவர்களுள்பட சுமார் 2,000 மாணவர்கள் இந்தியாவிலிருந்தும் பாகிஸ்தானிலிருந்தும் வந்து மகாநாட்டில் பிரதிநிதிகளாக கலந்துகொள்வர்.

### சிமந்தி உருக்கு விலை உயர்வு

இந்திய சர்க்கார் ஆலோசனை

புதுடில்லி, டிச. 27

சிமந்தி, உருக்கு, இரும்பு விலையை உயர்த்துவதென இந்திய சர்க்கார் தீர்மானித்திருக்கிறது. சிமந்தி டன்விலை ரூ. 65லிருந்து ரூ. 87-8-0க்கு உயர்த்தப்படுமென்றும், இரும்பு விலைபற்றி முடிவு செய்யப்படவில்லை என்றும் தெரிகிறது.

### மன்னர் அப்துல்லாவின் பிரதம மந்திரி ராஜினாமா

அம்மன், டிச. 28

ஹாஷிமைட் ஜோர்டான் மன்னர் அப்துல்லாவின் பிரதம மந்திரி ராபி பாஷா ராஜினாமா செய்து விட்டார். அப்துல் ஹுதாவை மந்திரிசபை அமைக்கும்படி அவரை பிரதம மந்திரியாக மன்னர் நியமித்திருக்கிறார். அப்துல் ஹுதா 1943ல் பிரதம மந்திரியாக இருந்தவர்.

### கராச்சியருகே கோர விமான விபத்து

23 பேர்கள் மாண்டனர்

இந்திய டகோடா விமானம் விழுந்து நொறுங்கியது

புதுடில்லி, டிச 28

கராச்சிக்கும் பம்பாய்க்குமிடையே ஆகாயப் போக்குவரத்து நடத்தி வந்த ஒரு இந்திய டகோடா விமானம் நேற்று மாலை கராச்சியிலிருந்து பம்பாய்க்குப் புறப்பட்ட இருபது நிமிட நேரத்தில் கராச்சியிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் வித்திற்குள்ளாகி கடற்கரையில் விழுந்து நொறுங்கியது. அதிலிருந்த 19 பிரயாணிகளும் 4 சிப்பந்திகளும் மாண்டனர். பிரேதங்கள் நூறு கெஜ தூரத்திற்கு அப்பால் சிதறுண்டு கிடந்தன. இதுவரை 23 பிரேதங்கள் அகப்பட்டன. அவ்விமானத்தில் இரு ஸ்திரீ பிரயாணிகளிருந்தனர். பாட்னாவைச் சேர்ந்த அமெரிக்க பாதிரி ஸலோவனும் கராச்சி பிரங்கிப் படையைச் சேர்ந்த லான்சிநகும் அதில் பிரயாணம் செய்தனர். விமானத்திலிருந்த அனைவரும் மாண்டனர்.

விபத்து நடைபெறக் காரணம்பற்றி புலன் விசாரணை நடைபெறுகிறது. இந்திய விமான சரித்திரத்தில் இது பெரியதோர் விபத்தாகும். "ஏயர் இந்தியா" விமானக் கம்பெனி அதிகாரிகள் விபத்து நடைபெற்ற இடத்தைப் பார்வையிட இன்று காலை புறப்பட்டுச் சென்றார்கள்.

### 50 ஆண்டுகளில் பிரளயம்!

"அதுவரை உயிருடன் இருப்பேன்"

114 வயதான இந்திய தீர்க்கதரிசி கூறுகிறார்

மெல்போர்ன், டிச. 26

இன்னும் 50 ஆண்டுகளில் யுகப்பிரளயம் வருமென்று சொன்ன ஆஸ்திரேலியாவுள்ள 114 வயதான இந்திய தீர்க்கதரிசி அமர் காகா சிங், இந்த ஜோஸியம் பலிக்கும் வரையில் தாம் உயிருடன் இருக்கப் போவதாக சொல்கிறார். இவர் 18 யுத்தங்களில் போராடியிருக்கிறார். 9 கலியாணங்கள் செய்து கொண்டிருக்கிறார். சமீபத்தில் தோன்றிய வால் நக்ஷத்திரத்தை பற்றியும் இன்னும் இவர் சொன்ன பல ஜோஸியங்களும் அப்படியே பலித்திருக்கின்றன.

### பாரசீகத்திற்கு ஈடன் பயணம்

லண்டன், டிச. 28

பிரிட்டனின் மாஜி அந்நிய நாட்டு மந்திரியும் இடைபொழுது காமன்ஸ சபையில் எதிர்க் கட்சியின் உப தலைவராக இருப்பவருமான அந்தோனி ஈடன் தன் மகனுடன் பாரசீகத்திற்குப் பயணமானார். அவர் ஈராக்கிற்கும் சவூதி அரேபியாவுக்கும் விஜயம் செய்வார்கள்.

ஆக்ரா, டிச. 26

ஆக்ரா கண்டோன்மெண்டு போர்டு அதன் எல்லைக்குள் பசு மாடுகளைக் கொல்லக் கூடாது என்றும், பசு மாமிசத்தை விற்கக் கூடாது என்றும் தடுத்து விட்டது.

இந்தத் தீர்மானம் உடனே அமுலுக்கு வருகிறது.

### ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள்

கான்பரா, டிச. 27

இந்தியாவில் விஞ்ஞான, நல்லெண்ண சுற்றுப் பிரயாணம் செய்ய 5 ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் ஞாயிற்றுக்கிழமை புறப்பட்டு, ஜனவரி முதல் தேதி கல்கத்தா வந்து சேருவர். முதலில் அவர்கள் பாட்னாவில் கூடைபெற விருக்கும் இந்திய விஞ்ஞான காங்கிரஸ் கூட்டத்திற்கு விஜயம் செய்வார்கள்.

### இத்தாலி மாஜி மன்னர் மரணம்

அலெக்சாண்டிரியா, டிச. 28

1946 மே மாதம் சிம்மாசனமிழந்து எகிப்தில் தேசப் பிரஷ்ட வாழ்க்கை நடத்திவந்த இத்தாலியின் மாஜி மன்னர் விக்டர் எமானுவேல் இன்று இங்கு தனது 78 வயதில் காலமானார்.

பின்னர் அவர்கள் இந்திய விருந்தாளியாக ஆராய்ச்சி ஸ்தாபனங்களுக்கும் சர்வகலாசாலைகளுக்கும் விஜயம் செய்வார்கள்.

நேஷனல் லொசிஞ்சர். பிஸ்கெற்

நல்ல அனுபவம் வாய்ந்தவர்களால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பெற்ற
லொசிஞ்சர்களும், பிஸ்கெற்றுகளும்
பாலர் முதல் வயோதிபர் வரை விரும்புவது
நேஷனல் லொசிஞ்சர்களும், பிஸ்கெற்றுகளுமே.
மொத்தமாகவும், சில்லறையாகவும்
குறைந்த விலைக்கு எங்கும் கிடைக்கும்.
ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள்!
நேஷனல் கொன்பெக்ஷனரி கம்பெனி,
489, பேலிய கொட, கழனியா.
டெலிபோன்: கழனியா 85.

# பர்மாவாழ் இந்தியர் அரசியலில் பர்மியர்களாகிவிடவேண்டும்

## நிரந்தரக் குடியேற்ற கட்டுப்பாடு சட்டம் இயற்றப்படும்

### அகில பர்மா இந்தியர் மகாநாட்டுக்கு பர்மா பிரதம மந்திரி செய்தி

### சுதந்திர பர்மாவுக்கு இந்தியாவின் நன்கொடை

ரங்கூன், டிச. 27

"பர்மாவில் தங்கியிருக்க விரும்பும் இந்தியர்கள் தங்களை பர்மியர்களாகவே கருதி பர்மிய தரப்புகருத்தை அறிய முயல வேண்டும். அரசியல் ரீதியில் அவர்கள் பர்மியர்களைப் போலவே கருதப் படுவர்" என்று அகில பர்மா இந்தியர் மகாநாட்டுக்கு பர்மிய பிரதமர் தக்கின் நு அனுப்பியுள்ள ஆசிச்செய்தியில வேண்டுகிறார்.

அவர் மேலும் கூறுவதாவது:- தங்கள் தாய்நாட்டுடன் அரசியல் தொடர்பை வைத்துக்கொள்ள விரும்பும் இந்தியர்களுக்கு பர்மா பிரஜைகளின் விசேஷ சலுகைகள் கிடையா.

ஆயினும் உங்களை எங்கள் சக்திக்கு இயன்றவரை பாதுகாப்போம். சட்டரீதியான ஜீவனோபாய தொழில்களில் உங்களுக்கு உதவிபுரிய முயல்வோம்.

நாங்கள் சமீபத்தில் கொண்டுவரப் போகும் நிரந்தர குடியேற்ற கட்டுப்பாட்டுச் சட்டங்களைக் கண்டு நீங்கள் வெறுப்படையக் கூடாது. ஏனெனில் கட்டுப்பாடின்றி குடியேற்றம் நடைபெறுவதை எந்த தேசத்திலும் அனுமதிக்க முடியாது. அதுக தொல்லை தராத ரீதியில் குடியேற்றக் கட்டுப்பாடு இருக்கும். பர்மாவின் பொருளாதார அமைப்புக்குத் தேவையில்லாதவர்கள் நிரந்தரமாக குடியேறுவதை நாங்கள் தடுக்க வேண்டியதே. ஆனால் இங்கு தங்க அனுமதிக்கப் படுபவர்கள் நன்கு நடத்தப்பட்டு பாதுகாக்கப்படுவர்."

இந்திய சர்க்காரின் அரசியல் ஆலோசகரான சர். பி. என். ராவ் மகாநாட்டைத் திறந்து வைத்தார்.

இந்திய அட்ஹாக் கமிட்டி தலைவரான ஸ்ரீ எம். ஏ. ரஷீத் மகாநாட்டுக்கு தலைமை வகித்தார்.

உதவி பிரதமர் கர்னல் பாலிடயா, அயல்நாட்டு மந்திரி உடின் டுட் முதலிய பர்மிய தலைவர்கள் மகாநாட்டில் பிரசன்னமாயிருந்தனர்.

### இந்தியாவின் நிலை

புதுடில்லி, டிச. 27

பர்மாவின் சுதந்திர தினத்தன்று ஜனவரி 4-ம் தேதி பர்மாவுக்கு இந்தியா ஒரு பரிசை அளிக்கும். பர்மாவின் கடைசி மன்னரான தீபா உபயோகித்து வந்த தக்ஷபோஷ் என்

(4-ம பக்கம பார்க்க)

உங்கள் நெஞ்சில் — மங்கள சூரியன்

மெய்கண்டான்
REGD: 7479
திருக்குறட் கலண்டர்

இப்பொழுதே வாங்குங்கள்; பிற்றினால் கிடைப்பதரிது.

தேதி ஒற்றைகளில் மெய்கண்டான் பிறெஸ் படங்களில் மங்களகரமான சூரியன் கவனித்து பார்த்து வாங்குங்கள்.

இனும்! இனும்! இனும்!

அருள்சேர்ந்த நெஞ்சினர்க்கில்லை இருள்சேர்ந்த இன்னா வுலகம் புகல்

என்னும் திருக்குறளுள்ள எங்கள் கலண்டருக்கு No. 1 டயறி இரும்-குறித்த குறளுள்ள தேதி ஒற்றையில் எங்கள் அச்சியந்திரசாலையின் அடையாளமும் உள்ளது. அத்தேதி ஒற்றையைக் கிழித்து அனுப்பினால் டயறி அனுப்பலாம்.

மெய்கண்டான் தமிழ்டயறி Nos: 1 & 2,
மிகவும் பிரயோசனமுள்ளன. கையடக்கமான அளவும் அழகும் உறுதியும் உள்ளன.

கொழும்பில் எங்கள் கிளை நிலையத்தில் சில்லறைக்குக் கீழ்க்கண்ட விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்
1 சிவப்பு 1க்கு ரூபா 1-75.

பிரபல வியாபாரிகளிடம் எங்கும் கிடைக்கும்

மெய்கண்டான் அச்சியந்திரசாலை,
மட்டுவில், சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN."
104 ஏ, தட்டாந் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சந்தா விபரம் மார்கழி மீ 15 உ
செவ்வாய்க்கிழமை

## மதத் துவேஷம் வேண்டாம்!

அரசியலில் மதத்தைப் புகுத்துவது முறையற்றது. இந்தியத் தலைவர்களாகிய மகாத்மா, நேருஜி போன்றவர்கள் இப் புனிதமான கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறார்கள். ஆனால் சிலர் தனக்குக் இந்த உணர்ச்சியை ஊட்டியும் வருகிறார்கள் ஆனால் இலங்கைத் தலைவர்களோ இதற்கு நேர் மாறான கொள்கையைப் பரப்பி வருகிறார்கள். தேசியக் கொடி யென்றால், ஒரு ஜாதியினரின் கொடியாகிய சிங்கக் கொடிதான். தேச பாஷையென்றால் சிங்களப் பாஷைதான். இப்பொழுது கடைசியாக இலங்கையின் மதம், பௌத்த மதமதான் என்ற முறையிலும் காரியங்கள் ஆற்றமுற்பட்டிருக்கிறார்கள்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை அகில இலங்கைப் பௌத்தர்கள் மகாநாட்டில் பேசிய பேராசிரியர் டாக்டர் பலால சேகரா மேற்கூறிய விஷயத்தைத் தான் விதைத்துள்ளார். அத்துடன் கிறிஸ்தவர்கள் மீதும் பாதிரிமார்கள் மீதும், அரசாங்கத்தின் மீதும் அபாண்டமான பழிகளையும் சுமத்தியுள்ளார். அரசாங்கம் சென்ற காலங்களில் கிறிஸ்தவ மிஷனரிமார்களுக்கு உதவி செய்தது உண்மைதான். ஆனால் அதற்காக கிறிஸ்தவ மிஷனரிமார்கள் கெட்டவர்கள் என்று கூறமுடியுமா? ஆங்கில கிறிஸ்தவ மிஷனரிமார்கள் இந்நாட்டுக்கு வந்திலரேல், கல்வி நிலைமை மோசமாகத்தான் இருந்திருக்கும். கல்வியை மக்களுக்குப் போதிப்பதற்கு மிஷனரிமார்கள் எடுத்த சிரத்தையை எவரும் மறக்கமுடியாது. அரசாங்க உதவியிருந்தால் பௌத்த சமயத்தவர்களும் மிஷனரிமார்கள் போன்று செய்திருக்கலாம் என்று இவர் கேட்கலாம். அது ஒரு தர்க்க கேள்வி.

பௌத்தர்கள் இலங்கையில் பெரும்பான்மையானவர்கள். இவர்களது தர்மஸ்தாபனங்கள் நெடுங்காலமாகச் சீர்கேடான முறையில் நடத்தப்பட்டு வந்தன. இம்முறைகேட்டை ஒழிப்பதற்கு அரசாங்கத்தால் பௌத்த தர்ம ஸ்தாபனங்கள் சட்டம் ஏற்படுத்தப்பட்டது. இச்சட்டப்படி அரசாங்க தர்மகர்த்தாக்களிடம் பௌத்த தர்ம ஸ்தாபனங்களின் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது. அரசாங்க தர்மகர்த்தாக்கள் சில சமயங்களில் கிறிஸ்தவர்களாகவுமிருப்பர். ஆகவே சில வருடங்களில் கிறிஸ்தவர்கள்தான் பௌத்த தர்ம ஸ்தாபனங்களை நிர்வகித்தனர். இதே நிலைமைதான் இன்றும் நிலவுகின்றது. இன்று இந்த நிலைமையென்றால் முன் அங்கிருந்து விடுவோம். அரசாங்கம் உதவியிருப்பின் என்று கூறுவது பொருந்தாக் கொள்கையாகும்.

கல்வி பரவுதல் வேண்டும். மக்கள் அறிவைப்பெற வேண்டும். பழைய சந்தர்ப்பங்களை நினைத்து மதத்துவேஷத்தை உண்டாக்குவதால் பயனில்லை. இப்பொழுதுள்ள வகுப்புத் துவேஷத்துடன், மதத்துவேஷமும் சேர்ந்தால் நாட்டில் விளையக்கூடிய அனர்த்தங்கள் அனந்தமாகும்.

"என் தெய்வம் பெரிது, உன் தெய்வம் பெரிது" என்று மோதிக்கொள்ளுதல் கூடாது. பௌத்தர்கள் தங்கள் நிலைமை சீர்திருந்தக் காரியங்கள் செய்யலாம். பேராசிரியர் அதற்கு வழிகாட்டலாம். இதைவிட்டு சென்றதை நினைந்து பொதுமக்களிடையே மதத்துவேஷத்தை மூட்டுவது ஒரு படித்த பேராசிரியர் செய்யக்கூடிய தொன்றல்ல.

அஹிம்சையை உலகினருக்குப் போதித்தவர் புத்தபிரான். அவரின் வழியைப் பின்பற்றுட பேராசிரியர் விவேகமாகநடந்து கொள்ள வேண்டும்.

## 15 வினாடிகளில் சாப்பாடு தயார்!

### அமெரிக்காவில் புதிய யந்திரங்கள்

**நாணயத்தைப் போட்டவுடன் கூமேல் சாமான்!**

நியூயார்க், டிச 26

இன்னும் சில வருஷங்களில் அமெரிக்காவில் பல நாணய யந்திரங்கள் ஏற்பட்டுவிடுமென்றும் நல்ல பளபளப்பான ஒரு யந்திரத்தைக்கொண்டே வியாபாரம் நடத்திவிடலாமென்றும் ராய்ட்டர் நிருபர் கூறுகிறார். (நாணயத்தைப் போட்டவுடன் சகலவிதமான சாமான்களும் கிடைத்துவிடும்)

அவர் மேலும் கூறுவதாவது:-

நாணய யந்திரங்களிலிருந்து அமெரிக்கர்கள் ஏற்கனவே சுடச்சுட தயாரான உணவுகளிலிருந்து இன்ஷியூரன்ஸ பாலிஸிகளை வரை பலவிதமான பொருட்களைப் பெற்று வருகிறார்கள். கூடிய சீக்கிரமே இனி பலவிதமான பொருட்களை அவர்கள் பெற முடியும். இந்த யந்திரங்கள் பானங்களைக் கலந்து கொடுக்கும். புத்தகங்கள் விற்கும் செய்யும் பூட்ஷூக்களுக்கு கூட 'பாலிஷ்' போட்டுக் கொடுக்கும்.

இந்தப் புதிய யந்திரங்களுக்கு மாயக் கண்களும் மாயக் காதுகளும் உண்டு. டாலருக்குச் சில்லறை கொடுக்கும், செல்லாக்காசுகளை வெளியே தூக்கி எறிந்துவிடும், நாணயத்தைப் போட்டுவிட்டு எட்டி உதைக்கவோ சாமான்களைப் பெறக் குத்துவிடவோ வேண்டாம்.

இவ்வருஷம் மட்டும் நாணய யந்திரங்கள் 10 கோடி டாலர் பெறுமான சாமான்களை விற்றிருக்கின்றன. 1950 க்குள் இதைவிட ஐந்து மடங்கு பெறுமான சாமான்களை விற்குமென நிபுணர்கள் கூறுகிறார்கள்.

இன்னும் சில மாதங்களில் விஸ்கியையும் சோடாவையும் கலந்து நம் முன் வைக்கும் யந்திரங்கள் தயாராய்விடலாம். இந்த யந்திரத்தில் நாணயத்தைப் போட்டு சுற்றிவிட வேண்டியதுதான் பாக்கி. விஸ்கியும் சோடாவும் கலந்த பானம் தயாராக ஆஜராய்விடும்.

### சூடான காப்பி தயார்

ஏற்கனவே காப்பி யந்திரங்கள் பாலையும் சர்க்கரையையும் டிகாஷனுடன் சேர்த்து காப்பி தயார் செய்து கொடுத்து வருகின்றன.

15 வினாடிகளில் சுவை சிறிதும் குறையாமல் உணவு தயாராக்கும் யந்திரங்களும் அபிவிருத்தி செய்யப்படுகின்றன.

யந்திரத்தில் நாணயத்தைப் போட வேண்டியதுதான் தாமதம், அவனுக்குப் பிடித்தமான புத்தகம் வெளியே வந்து விடும். பல வர்ணங்களிலும் அளவுகளிலும் மேஜைகள் விற்கும் யந்திரங்கள் ஏற்கனவே இருக்கின்றன.

கி மு. 200 ம் ஆண்டிலேயே அலெக்ஸாண்டிரியாவில் ஒரு வியாபாரி முதல்முதலாக ஒரு நாணய யந்திரத்தைத் தயாரித்தான். 6 டிராக்மாக்களுக்கு (கிரேக்க நாணயம்) புனித ஜலத்தை இந்த யந்திரம் வற்றி வந்தது.

## பர்மா சுதந்திர விழாவுக்கு இலங்கைப் பிரதிநிதி

### திரு. பண்டாரநாயக்கா நாளை செல்கிறார்

கொழும்பு, டிச. 30

பர்மா சுதந்திர தின விழாவுக்கு பிரதிநிதிகள் சபைத் தலைவர் எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்கா இலங்கையின் பிரதிநிதியாக ரங்கூனுக்கு இன்று காலை கப்பல் மார்க்கமாகப் புறப்படுகிறார். அவருடன் அவரது நிரந்தரக் காரியதரிசி ஈ. டபிள்யூ கன்னங்கரா வும் செல்வாரெனத் தெரிகிறது.

அவர்கள் ரங்கூனில் ஜனவரி 3-ம் தேதி தொடக்கம் 7-ம் தேதி வரை இருபபார்கள் என்றும் அதன் பிறகு அவர்கள் கல்கத்தா செலவார்களென்றும் தெரிகிறது. பின்னர் சென்னை போய் ஜனவரி 9-ம் தேதி இலங்கை மீள்வார்கள்.

# இலங்கை பிரதம மந்திரிக்கு டில்லியில் விருந்துபசாரம்

## ஹை கமிஷனர் கிரியுடன் ஒன்றரை மணிநேரம் சம்பாஷணை

**இலங்கை-இந்தியா பிரச்னைகள் பற்றி சென்னை தமிழ் தினசரிப பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள்**

புதுடில்லி, டிச 28

இலங்கையில் இந்திய ஹைகமிஷனராகவுள்ள திரு. வி. வி. கிரி இன்று இலங்கைப் பிரதமமந்திரி திரு. டி. எஸ். சேனநாயகாவைச் சந்தித்து ஒன்றரை மணி நேரம் பேசிக்கொண்டிருந்தார் மேலும் தொடர்ந்து பேச்சு நடைபெறும். இலங்கை பிரதமமந்திரி திரு. சேனநாயககா பண்டித நேருவுடன் இன்று இரண்டு மணி நேரம் இலங்கை இந்திய பிரச்னைகளபற்றி விவாதித்தார். நாளையும் தொடர்ந்து பேச்சுகள நடைபெறும்.

பண்டித நேரு நாளை திரு. டி. எஸ். சேனநாயக்காவுக்கு ஒரு விருந்தளிப்பார். இன்று மாலை இந்தியாவிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதி திரு டி சில்வா, திரு. சேனநாயக்கவுக்கு தேனீர் விருந்தளித்தார். அதற்கு பண்டித நேருவும் இந்திய அரசாங்கத்தின் பிரபல அதிகாரிகளும் புதுடில்லியிலுள்ள அந்நிய நாடுகளின் ஸ்தானிகர்களும் விஜயம் செய்திருந்தனர்.

### சென்னைப் பத்திரிகைகள் கருத்து

சென்னை, டிச, 28

இன்று வெளியான 'தினமணி' பத்திரிகை "இலங்கை-இந்தியா பேச்சு" என்ற தலைப்பில் பின்வருமாறு தலையங்கம் எழுதியிருக்கிறது:-

இந்தியா சர்க்காருடன் பேசி உடன்பாடு காண்பதற்காக இலங்கையின் பிரதமர் சேனநாயகா டில்லி சென்றுள்ளார். இரண்டு தேசங்களுக்கும் பொதுவான அக்கறையுள்ள பிரச்னைகள் மூன்று. [1] இலங்கையிலுள்ள இந்தியர்களின் அந்தஸ்து (2) வர்த்தக, பொருளாதார உறவுகள் (3) பாதுகாப்பு ஏற்பாடுகள். மூன்றாவது விஷயம் சுலபத்தில் தீரக்கூடியது. இப்பாதையை உலக நியதியில் இலங்கையின் பாதுகாப்பு இந்தியாவின் திட்டத்துடன் இணைக்கப்பட்டதாக இருந்தாகவேண்டும். இல்லாவிடில் இரண்டு தேசங்களுக்குமே பலங்குறைவு ஏற்படும் எனவே பாதுகாப்பு சம்பந்தப்பட்டவரை இந்தியாவும் இலங்கையும் ஒன்றாகவே பாவிக்கப்படவேண்டும். இந்த அடிப்படையை ஸ்ரீ சேனநாயகா ஒப்புகொண்டிருப்பதாக அறிவிப்பதுதக்கது. பிரிட்டனுடன் இடைக்கால ஏற்பாடாக இலங்கை செய்துகொண்டுள்ள பாதுகாப்பு உடன்பாடு, இந்தியாவுடன் தற்காப்பு ஒப்பந்தம் ஏற்பட்ட பின் புதுநிலைக்கேற்றபடி மாற்ற, அல்லது திருத்தப்படுவது சாத்தியமாயிருக்குமென்றே நினைக்கிறோம்.

வாணிகத்தக, பொருளாதாரப் பிரச்னைகள் சம்பந்தப்பட்டவரை பரஸ்பரம் அதிகபட்ச நல்லெண்ணத்துடன் கூடிய உடன்பாடு ஏற்படுமென்றே எதிர்பார்க்கிறோம். இலங்கைக்கு இந்திய உணவு சப்ளையும், உயர்தரப் படிப்பு வசதிகளும் இன்றியமையாதவை இலங்கையின் ரப்பர், கொப்பரு, தேயிலை முதலியவற்றிற்கு இந்தியாதான் இன்னும் நெடுநாளைக்கு முக்கிய மார்கெட்டாக இருக்கும். இலங்கை-இந்திய உறவு பலப்படுவதன் விளைவாக கொழும்பு துறைமுகத்தின் வர்த்தக முக்கியத்துவம், தென் இந்தியர் சம்பந்தப்பட்டவரை பேரும் அதிகமாகக்கூடும். இதனால் இலங்கைக்கு நிலையான லாபம் கிடைக்கும்.

டில்லி சம்பாஷணைகளில் முக்கியமாக பரிசீலனைக்கு வந்தது இலங்கைவாழ் இந்தியர் பிரச்னை இதில் நீச்சய உடன்பாடு ஏற்படுமென ஸ்ரீ சேனநாயகா நம்புகிறார், நியாயமான அடிப்படையில் அவர் பிரச்னையை அணுகுவாராயின் ஒரு நொடியில் ஒப்பந்தம் ஏற்பட்டுவிடும். இலங்கையைச் சொந்த நாடெனக் கருதும் இந்தியர்களுக்கு சிங்களவரைப்போல் வீடு, எல்லா வகைகளிலும் சமஉரிமையும் அந்தஸ்தும் இருக்கவேண்டும் என்பதுதான் எல்லா பகுதியினரின் ஏகோபித்த கருத்தாகக இலங்கையில சிறிதகாலம் வாழ்ந்து பணம் சம்பாதித்ததுகொண்டு இந்தியாவுக்குத் திரும்பிவிடும் நபர்களுக்கு முழு பிரஜா உரிமையை யாரும் கேட்கவில்லை. சில சிங்களவ ராஜீயவாதிகள் பிரச்னையைக் குழப்புவதற்காகப் பலவிதமான வஷமப பிரசாரம் செய்து வந்ததுண்டு. இருதேச பிரஜா உரிமையை அளிக்க இடமில்லை யெனபது அத்தகைய வாதங்களில் ஒன்று. அவர்கள் கூறுவதுபோல இலங்கை-இந்தியர்கள் இருதேச பிரஜா உரிமையை எக்காலத்திலும் காரியமே இல்லை இப்பொழுதும் கேட்கவில்லை. "இலங்கைப் பிரஜைகளுடன் இலங்கையர்களாகி இலங்கையிலேயே சாகுவதாக வாழ" தங்களை அனுமதிக்கவேண்டுமென்றுதான் அவர்கள் கேட்கிறார்கள். இந்தியா சர்க்காரின் நிலையும் இதுதான் என்பது பன்முறை சந்தேகத்துக்கு இடமில்லாதவாறு அறிவிக்கப்பட்டுள்ளது சமீபத்தில் பர்மாவுடன் செய்துகொண்ட உடன்பாட்டில் இந்தக் கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதை ஸ்ரீ சேனநாயகா அறிவார். 1941-ம் ஆண்டில் இதை இலங்கை சர்க்கார் ஒப்புக்கொள்ள மறுத்ததாலதான் சுமுகமான பைசல் சாத்தியமாகாமற போயிற்று.

இலங்கையர்களாகவே வாழ விரும்பும் இந்தியர்களை நிர்ப்பந்தமாய் அங்கிருந்து வெளியேறும் எந்த ஏற்பாட்டிற்கும் இந்திய சர்க்கார் இணங்கமாட்டார்கள். இலங்கையில் இப்பொழுதுள்ள இந்தியர்கள் இன்று நேற்று சென்றவர்கள் அல்ல. குறைந்தது 8 வருஷ காலமாக அங்கே வசித்திருப்பவர்களே. 1939 ம் ஆண்டில் இலங்கை சர்க்கார் அங்குள்ள இந்தியர்களை குறைக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் சர்க்கார் வேலையிலிருந்த தினச் சம்பளத் தொழிலாளரை நாடு கடத்த முற்பட்டனர். புதிதாக இந்தியாவிலிருந்து எந்தத் தொழிலாளியும் இலங்கைக்குப் போகக் கூடாதென விதித்து இந்திய சர்க்கார் பதில்-நடவடிக்கை எடுத்தனர். அதற்கப்புறம் புதிதாட்களை அனுமதிக்கும்படி இலங்கை பன்முறை வற்புறுத்தியது. ஆனால் ஏற்கெனவே அங்குள்ளவர்களின் அந்தஸ்து, உரிமை, பிரச்னைகள் தீராதவரை, ஷை தடையை நீக்க முடியாதென இந்தியா சர்க்கார் உறுதியாக இருந்துவருகிறார். 1941-ம் ஆண்டில் இரண்டு நாடுகளிலும் பிரிட்டிஷ் ஆதிக்கம் வலுவாக இருந்த காலத்தில் சமபாஷணைகள் நடைபெற்றன. இலங்கையில் "நிலையான ஹக்குள்ள" இந்தியர்களுக்கு சம அடிப்படையில் பிரஜாவுரிமை வழங்குவதாக இலங்கையர் தரப்பில் கூறப்பட்டது. ஆனால் "நிலையான ஹக்குள்ள வர்கள்" என்ற சொற்றொடரின் வியாக்கியானத்தில் சொத்துரிமையிலாத தொழிலாளரும், நகரத்தொழிலாளரும் வருவார்கள். இவர்களை வலுக்கட்டாயமான சிறுபான்மையினர்க்கு மட்டும் பிரஜாவுரிமை தரும் எந்த ஏற்பாடடையும் ஒப்புக்கொள்ள முடியாதென்ற கிளர்ச்சி வலுத்ததன் விளைவாக, ஷை சலுகையுடன் கூட 1941-ல் பேசி முடிவான ஒப்பந்தத்தை ஊர்ஜிதம் செய்ய இந்தியா சாகக்கார் மறுத்துவிட்டனர். அதற்கப்புறம் இப்பிரச்னையில் முட்டுக்கட்டையே இருந்துவருகிறது. இடைக்காலத்தில் சில தோட்டத் தொழிலாளரை குடியிருப்புகளிலிருந்து விரட்டி, தொல்லைகளை விளைவித்து, நாடு கடத்த இலங்கையர் புது சூழ்ச்சிகளைச் செய்தனர். அதிர்ஷடவசமாக அவை பிசுபிசுத்துவிட்டன. இலங்கையர்களாக வாழ விரும்பும் இந்தியர்களை இனி விரட்டுவது அசாத்தியமென்பது இப்பொழுது சிங்களவர்களுக்கும் புலனாகிவிட்டதென நினைக்கிறோம் இரு நாடுகளும் சுதந்திர அந்தஸ்துடன், பிரிட்டிஷ் குறுக்கீடுகள் இல்லாமல், முதல் தடவையாக டில்லியில் கூடிப் பேசும் சூழ்நிலை வெற்றிக்கு உகந்தது என்பதில் ஐயமில்லை.

### 'தினசரி' அபிப்பிராயம்

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே உள்ள பிரச்னைகளைப் பற்றி பேசி முடிப்பதற்காக இலங்கை பிரதம மந்திரி திரு சேனநாயகா டில்லி போய்ச் சேருகிறார். நாளை இந்தியா பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லாலுடன் சம்பாஷணைகள் நடத்துவார். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேஉள்ள முக்கியமான பிரச்னைகள் இரண்டே இரண்டுதான். ஒன்று இலங்கையிலுள்ள இந்தியருக்கு பிரஜா உரிமை கொடுப்பது; மற்றொன்று இந்தியாவுக்குப் பலங்கைக்காக்ஷாள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளைப்பற்றியது. இந்தியாவும் இலங்கையும் தற்சமயம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலுள்ள சுதந்திர நாடுகளாய் விளங்குகின்றன. இதற்குமுன் ஒரு அடிமை நாடுகளாய் இருந்ததுபடியால் பாதுகாப்புகளைப் பற்றி கவலை இல்லை. ஆனால் சுதந்திர நாடுகள் தங்களுடைய பாதுகாப்புக்கு தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். இந்தியாவின் எல்லை ஆயிரக்கணக்கான மைல்கள் கடற்கரையாய் இருக்கிறது. இலங்கையோ ஒரு தீவாய் இருக்கிறது. எனவே இரு நாடுகளுக்கும் கடற்படைபலம் அதிகமாய் இருக்க வேண்டும். இலங்கையின் அமைப்பானது இந்தியாவின் ஒத்துழைப்பில்லாமல் பாதுகாப்பு ஏற்பாடடை வெற்றிகரமாய் செய்யமுடியாதபடி இருக்கிறது அத்தகைய கூட்டுறவுகளைக் கூடாக்கலையும் இந்து மகா சமுத்திரத்தையும் கண்காணித்து இந்தியாவுக்குப் பாதுகாப்பு செய்யவும் சிறந்ததாய் இருக்கிறது. எனவே இரு நாடுகளின் பாதுகாப்புக்காக இலங்கையில் கடற்படை தளங்களும் விமான தளங்களும் இருந்தாகவேண்டும். இருநாடுகளும் பூர்ணமாய் ஒத்துழைத்தாலொழிய இது சாத்தியமில்லை ஆனால் இந்த ஒத்துழைப்புக்கு இடையூறாக ஒரு முக்கியமான பிரச்னை இருக்கிறது. அதுதான் இலங்கையிலுள்ள இந்தியருக்கு பிரஜா உரிமை கொடுப்பதாகும் அதைப் பற்றி இன்னம் ஒரு திருப்திகரமான முடிவு ஏற்படவில்லை இலங்கையிலுள்ள தோட்டங்களில் தொழிலாளர் எல்லாரும் இந்தியராகவே இருக்கிறார்கள். தோட்டங்கள் தான் இலங்கையின் பொருளாதாரத்திற்கு அடிப்படையானவை அப்படியிருந்தும் அந்தத் தொழிலாளருக்கு பிரஜா உரிமை கொடுக்க இலங்கை சர்க்கார் சம்மதிக்கவில்லை. பிரஜா உரிமை கிடைக்க முடியாத விதத்தில் என்னெல்லாமோ நிபந்தனைகளை போடுகிறார்கள். இலங்கை இந்தியாவோடு ஒட்டாமற்போல இருப்பதால் தோட்டத்திற்கு வேலை செய்யப்போகும் இந்தியர்கள் அடிக்கடி இந்தியாவுக்கு வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். இதை இலங்கையர் ஆக்ஷேபிக்கிறார்கள்.

ஒன்று அவர்கள் இந்திய பிரஜைகளாய் இருக்க வேண்டும் அல்லது இலங்கை பிரஜைகளாய்இருக்க வேண்டும்என்று சொல்லுகிறார்கள். தொழிலாளருக்கு வோட்டுரிமை கொடுத்தவட்டாரஎராளமானசட்டசபை ஸ்தானங்கள் அவர்கள் கையில் போய்விடுமென்பது சிங்களவர்களின் பயம். இந்தியாவில முஸ்லிம் லீக் விஷமம் செய்ததைப்போல இலங்கையில் தமிழர் பேரால் விஷமம் செய்ய சிலர் முயற்சிப்பது சிங்களவரின் பீதியை அதிகரித்திருக்கிறது. ஆனால் ஒரு விஷயத்தை சிங்களவர் கவனிக்க வேண்டும் மைனாரிட்டிகளை ஒடுக்கவிட்டு வலுமம செய்வதெல்லாம் அந்நியர் ஆட்சியிலிருந்தான் சாத்தியமே ஒரிய சுயராஜியத்தில் நடக்கவே நடக்காது. மேலும் பொதுவாக இலங்கையிலுள்ள இந்தியர் இலங்கையின் நன்மைக்கு விரோதமாக முட்டுக்கட்டை போட ஒருக்காலும் சம்மதிக்க மாட்டார்கள். அவர்கள் சம்மதிக்கும்படி இந்தியாவிலுள்ள தலைவர்கள் ஒருக்காலும் ஆதரவு கொடுக்க மாட்டார்கள். இலங்கையில் பிரஜைகளானவர்கள் இலங்கையின் நன்மையை முதலாவதாக கவனிக்க வேண்டியதே நியாயம் இவ்விஷயத்தில் சிங்களவர் சொல்லும் கொள்கையை இந்தியத் தலைவர்கள் பூர்ணமாய் ஆதரிப்பார்கள். இந்திய சர்க்கார் கேட்பதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். இந்தியாவிலிருந்தநாடடில் போய் குடியேறினாலும்சரி, அங்கே அவர்களுக்கு சம சுதந்திரம் வேண்டும் என்பதே இந்தியா கேட்பதாகும் உரிமையிலாதகுலிகளாகவோ அடிமைகளாகவோ இந்தியரை எங்கும் அனுப்ப இந்தியா சம்மதிக்காது. இதை இலங்கையரிந்து கொண்டால் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே இணைபிரியாத நட்பு ஏற்பட எவ்வித தடையும் இருக்காது இலங்கையையும் இந்தியாவையும் சேரவிடாமல் இதுவரை தடுத்து வைத்திருந்தது பிரிட்டிஷ் ஆட்சி. அந்தஆதிக்கம் போய்விட்டபடியால் இனி உறவு ஏற்பட விடாமல் தடுப்பது எதுவுமில்லை. இந்தியாவின் உதவி இல்லாமல் இலங்கைக்கு சரியான பாதுகாப்பு கிடைப்பது என்பதை இலங்கை தலைவர்கள் உணர்ந்தாலாம்பார்கள் என்று நம்புகிறோம். எனவே தான் புதுநியோடும் தீர்க்க நாக்கதேதாடும் இந்திய பிரச்னையை தீர்ப்பதற்கு நாளை ஆரம்பமாகும் சம்பாஷணையில் அவர்கள் முயற்சித்து வெற்றி பெறுவார்களாக.

## கணவனைக் கொன்ற இளவரசி கைது

### கட்டாரியும் காதல் கடிதங்களும் அகப்பட்டன

**கள்ளக் காதலனும் மற்றும் இருவரும் கைது**

ஜான்ஸி, டிச. 27

ராஜ குடும்பத்தைச் சேர்ந்த ராணி கோவிந்தகுமாரி என்ற இளவரசியை, அவளுடைய கணவர் ராஜா ஜோதிமாரனை அவரை கொலை செய்ததாக வெள்ளிக்கிழமையன்று போலீசார் கைதுசெய்தனர். சென்ற வாரம் ராஜா ஜோதிமாரன் கொலை செய்யப்பட்டது இங்கு பெரும் பரபரப்பை உண்டுபண்ணி இருந்தது. ஆனால், அவரது மனைவியான இளவரசி ராணி கோவிந்த குமாரி நேற்று கைது செய்யப்பட்டது அதைவிட அதிகமாக பரபரப்பை உண்டு பண்ணிவிட்டது.

இளவரசியின் அறையை போலீசார் மூன்று மணிநேரம் சோதனை போட்டு, ரத்தக்கறை படிந்த துணிகளையும் ஒரு கட்டாரியையும், ஒருவாலிபனுக்கு எழுதிய காதல் கடிதங்களையும் கைப்பற்றினர். இந்தக் காதலனும், இந்தக் கொலையை செய்வதற்காக அமர்த்தப்பட்டதாக கூறப்படும் மற்றும் இரு வாலிபர்களும் போலீசாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இளவரசி ராணி கோவிந்த குமாரி மத்திய மாகாணத்திலுள்ள கான்கெர் சமஸ்தான மன்னரின் சகோதரி. இவர் 1934-ல் லக்ஷ்மணபுரி சர்வகலாசாலையில் படித்துக் கொண்டிருக்கையில் ராஜா ஜோதிமாரனை சந்தித்தார் ராஜா ஜோதிமாரன் ஒடுக்கத்தர் குடும்பத்தைச் சேர்ந்தவர். அந்த சமயம் உபாத்தியாயர் பயிற்சி கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். இவர்கள் இருவரும் கலியாணம் செய்து கொண்டது சமஸ்தான மன்னர்கள் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை உண்டு பண்ணியிருந்தது. அவளது பெற்றோர்களும்கூட முதலில் இதை ஆட்சேபித்தனர். பின்னர் இதை அங்கீகரித்து இளவரசிக்கு ஒரு ஜாகீரையும் கொடுத்தனர்.

---

## காஷ்மீரில் சர்தார் படேல்

### மும்முரமான தாக்குதலுக்கு ஆயத்தம்

**ஜம்முவின் எல்லையில் ஆயுதபாணிகளாக இருக்கும் 2 லட்சம் எதிரிகள்**

புதுடில்லி, டிச. 28

காஷ்மீர் நிர்வாகத் தலைவர் ஷேக் அப்துல்லா இன்று பத்திரிகா நிருபர்களிடம் பின்வருமாறு தெரிவித்தார்:-

காஷ்மீர் யுத்தம் இரண்டு மாதகாலம் நடைபெறுகிறது. எதிரிகள் சார்பில பாகிஸ்தான் ராணுவம் இன்று போராடுகிறதென்பதற்கு ருசுக்கள் இருக்கின்றன. பாகிஸ்தான் மறைமுகமாக இருந்து காஷ்மீரைத் தாக்குகிறது. காஷ்மீர் சமஸ்தானத்தின் தென் மேற்குப் பகுதியான ஜம்முவின் எல்லைப்புறங்களில் இரண்டு லட்சம் பேர்கள் ஆயுதங்களுடன் வந்து குவிந்திருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. காஷ்மீர் உள்நாட்டுநிலைபற்றி கவலை இல்லை. மக்களுக்குப் பூரண பொறுப்பாட்சி இருந்து வருகிறது. இராணுவ பலம் போதிய அளவில் இருக்கிறது. காஷ்மீரைப் பாதுகாக்கும் பொறுப்பை இந்திய துருப்புகள் ஏற்றுகொண்டிருந்தபோதிலும் பாகிஸ்தான் எல்லைக்குள் எவ்வித சேதமும் ஏற்படாதவாறு ஜாக்கிரதையாக நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் பாகிஸ்தான் எல்லைக்குள்ளிருந்து காஷ்மீரத்திற்குள் பீரங்கிப் பிரயோகங்கள் நடைபெறுகின்றன.

மாஜி இராணுவ வீரர்கள் அனைவரையும் படைகளில் சேர்க்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று ஜம்மு நிர்வாகசபைத் தலைவர் குலாம் முகமது பக்ஷி தெரிவித்தார்.

இன்று ஜம்முவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இந்தியா உதவிப் பிரதம மந்திரி சர்தார் படேல் பின்வருமாறு தெரிவித்தார்.

காஷ்மீரைப் பாதுகாக்க இந்திய அரசாங்கம் தன்னாலியன்றமட்டிலும் செய்யும் என்று நான் உறுதி அளிக்கிறேன். அதனால் ஏற்படும் பணச்செலவையும் பொருட் செலவையும் இந்தியா பொருட்படுத்தப் போவதில்லை.

இன்று சர்தார் படேல் காஷ்மீரிலுள்ள இராணுவ நிலைமை பற்றி காஷ்மீரிலுள்ள இந்திய துருப்புகளின் தளபதி மேஜர் ஜெனரல் கல்வந்த் சிங்கைக் கலந்து பேசினார். சர்தார் படேல் காஷ்மீர் மகாராஜாவையும் காஷ்மீர் நிர்வாகத் தலைவர்களையும் சந்தித்துப் பேசினார்.

இதற்கிடையே இந்திய துருப்புகள் தற்சமயம் பல முனைகளில் எதிரிகளின் தாக்குதல்களை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கின்றன.

அடுத்தாற்போல பெருந் தாக்குதலை ஆரம்பித்து எதிரிகளை முறியடிக்க மும்முரமான ஆயத்தம் நடைபெறுகிறது.

---

## நெசவு நிலையம் ஏற்படுத்துக!

### மீசாலையில் தீர்மானம்

மீசாலை, டிச. 30

சென்ற வியாழக்கிழமை மீசாலை வாலிபர் சங்கக் கூடடம் தலைவர் ஆர். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கிராமபுனருத்தாரணம், குடிசைக் கைத்தொழில் இவற்றின் முக்கியத்தை நன்கு விளக்கி ஆவன் செய்வதாக சாவகச்சேரிப்பிரதிநிதி திரு வி குமாரசுவாமி அவர்கள் வாக்களித்தார்.

திரு. வி. கனகசபை (நியாயவாதி) அவர்கள் உற்பத்தியாளர் சங்கம தேவை என்பதை விளக்கித் தீர்மானம் ஒன்று கொண்டுவர அதை கரகோஷத்துடன சபை ஏற்றது.

"நெசவு நிலையம் ஒன்று மீசாலைக்கு அத்தியாவசியம் தேவை என்றும் தாமே நெசவு செயடவர்களுக்கு இது உதவியாகும்" என்றும் பிரிதோர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

# இலங்கையின் நிகழ்ச்சிகள்

## ஹனுமந்தனின் கண்ணாடி ஜோஸியம்

### பிரிட்டனுக்கும் தென்னாப்பிரிக்காவுக்கும் ஹை கமிஷனர்கள் யார்?

குருநாக்கல் சொகுதி பிரதிநிதி திரு. ஸ்ரீ நிசங்கா விக்ரமா "ஹெலதிவ" என்னும் சிங்களப் பத்திரிகையின் சென்ற ஞாயிற்றுக்கிழமை இதழில் "ஸஹஸ்ரநெத்கே" எழுதியிருப்பதன் தமிழாக்கம்:-

இப்பொழுது பனிகாலம் என்பதும் போக கிறிஸ்மஸ் விடுமுறையென்றும் ஹனுமந்தனுக்கு நன்றாகத் தெரியும். எனினும் பார்லிமெண்டுக்கு வெளியே ஏதாவது திருகுதாளங்கள் நடக்கிறதாவென்று அறிந்து கொள்ள விரும்பிய ஹனுமந்தன் தன் அருமைபுதுமையான சீனக் கண்ணாடியால் லங்கா துவீபத்தைப் பார்த்தான். புராணங்களை இழந்த கொழுத்து பெருத்த டெண்ணோஸ்தி கோட்டையிலிருக்கும் ஒரு சாஸ்திரக்காரியிடம் சாஸ்திரம் கேட்கச் சென்றதுதான் இந்த முறை சீனக் கண்ணாடிக்கு தெரிந்தது. இதைக் கண்ட ஹனுமந்தன் தன் கண்ணையும் கண்ணாடியையும் நன்றாகத் துடைத்துக் கொண்டு கண்ணாடியைவெட்டாமல் நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

வெற்றிலையுடன் ஒரு ரூபாய் காசை காணிக்கையாகப் பெற்றுக்கொண்ட சாஸ்திரக்காரி சாஸ்திரம் கேட்கவந்த பெண்ணைப் பார்த்து பின்வருமாறு கூறினாள்:-

"சாஸ்திரத்தில் தெரிகிறபடி நீ பெரியகுடும்பத்தலைவிகுமாரி ஹாமி யென்று தெரிகிறது நீ அறிந்து கொள்ளவந்த விஷயமாவது, உன் அன்பிற்குரிய இருவரைப்பற்றியதாகும் ஒருவர் உன்னுடையகாதலன்; மற்றவர் உன்னுடைய நெருங்கிய உறவினராவர். இவர்களிருவரும் மந்திரிகளே. ஒருவரின் பெயர் ஸர் ஒலிவர், மற்றவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருக்கிறபடியினால் அவரின் பெயரை இப்பொழுது நான் சொல்லமாட்டேன். இவர்களிருவரும் அவர்களின் உறவினர்-யூ. என். பி.-கட்சியில் வில்லுக்கு அம்பு போன்றவர்களே. அசகாய நாயக்காவுக்கு முதுகெலும்பை வளைத்து பாவாடை விரிப்பவர்களே. கிரகசாரங்களின்படி அவர்களிருவருக்கும் எவ்வித அபிட்டமும் கிடையாது. இப்பொழுது அவர்களுக்கு யோக காலந்தான்."

"இவர்களிருவரும் தங்களது மந்திரி பதவிகளிலிருந்து விலகி எதிர்க் கட்சியினரின் ஆணாதரமான-சூடான-தர்க்கங்களுக்கு இலக்காகாமல் ஒதுங்கினால், தேச மக்களின் வெறுப்பிற்கு பாத்திரமாகாமல் லௌகீகம்சம்பந்தப்பட்டவரையில் சுகபோக வாழ்க்கைநடத்த எதிர்பார்த்திருக்கிறார்கள்."

"சென்ற தினங்களில் இலங்கை மக்களுக்கு தெரிந்த வாக்கு வெள்ளியின் பலாபலன்படி எதிர்காலத்தில் ஸர். ஒலிவர் இலங்கை ஸ்தானிகராக லண்டனில் பதவி வகிக்கச் செல்லக் கூடும். மற்ற ஆசாமி வழக்கு முடிந்த பின் தென்னாப்பிரிக்காவுக்கு இலங்கை ஸ்தானிகராக செல்லக்கூடும். பிரதமர் சேனநாயக்கா இலங்கை கவர்னராக விடத்தான் ஒரே நோக்கமாய் இருக்கிறார். அதுவும் முடியும்.

"எட்டு லட்சம் ரூபாய் செலவுசெய்து கிளாண்டர் கோமகனை வரவேற்கும் மஹா புனணிய கைங்கரியத்தின் மகிமையினால், இந்த ஜன்மத்திலேயே தான் ராணி மாளிகையில் ராஜவாழ்க்கை நடாத்தவள் போதலே நாயக்கா பெருமானவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும். இவுகே காலியாகும் அவரின் பதவிக்கு உரிமக்காரன் ஹொற ஹெலே வளவிருந்து வெளிவரக்கூடும். பண்டார நாயக்கா பிரதம மந்திரியானபின், முழு கபினட் சபையையும் களகிலேபோட்டு தூற்றி பதர்களை அகற்றி திறமையான இடங்களுக்கு, இடது பக்கத்திலும் எதிர்பக்கத்திலும் இருக்கிற திறமையான தலைவர்களையும் சேர்த்து பலம் பொருந்திய அரசாங்கத்தை நிறுவக்கூடும்"

சாஸ்திரக்காரியின் இந்த ஹேஷ்யங்களை ஓரேயடியாக பாத்துக்கொண்டிருந்த ஹனுமந்தனுக்கு ஏழுலகமும் சுழலுவதுபோல் தலை சுற்றத்தொடங்கியது. இதைக் கண்ட வைகுண்டக் கடவுள் ஹனுமந்தனின் மயக்கத்தை சுகப்படுத்த முயன்றும் முடியாமற் போய்விட்டது. அப்பொழுது வைகுண்டக் கடவுள் வாலவெள்ளியைக் கையால் பிடித்து, மஹா மந்திரத்தினால் நூறடி முறை ஜபம் செய்துவிட்டு இரண்டு அடி தலைக்கு கொடுக்கவே ஹனுமந்தனின் தலை மயக்கம் நீங்கிற்று.

ஹனுமந்தன் மறுபடியும் சீனக்கண்ணாடியை துடைத்து பார்த்தபொழுது, பார்லிமெண்டிலிருந்து நெருப்புப் பொறிகள் கிளம்புவது தெரிந்தது.

அதாவது இலங்கை மக்களுக்கு குறைந்த விலைக்கு கியூபா தேசத்திலிருந்து வாங்கும் கொந்தளாந்தை சுந்தர விநகம் அய்யா ஏதோ இரகசிய காரணத்தை முன்னிட்டு தடைசெய்துவிட்டார். அதுவும் போதாதென்று, சுந்தர விநகம் அய்யா இலங்கை மக்களிடமிருந்து ஐம்பது சதத்திற்கு வாங்கும் ரப்பரை அதே இடத்தில் அறுபதொரு சதத்திற்கு விற்பதாகத் தெரிந்தது.

இதைக்கண்ட ஹனுமந்தனுக்கு மறுபடியும் தலைமயக்கம் உண்டானது. இலங்கையில் நிகழும் இந்த அக்கிரமங்களை கேட்டறிந்த வைகுண்டக் கடவுளுக்கும் தலை மயக்கம் உண்டானது. எவ்வளவோ ஆரம்ப சிகிச்சைகள் இவ்விருவருக்கும் செய்யப்பட்டதெனினும், இம்மயக்கம் ஜனவரி மாதம் 5-ம் தேதி, மறுபடியும் பார்லிமெண்டு ஆரம்பிக்கும் வரையும் மயக்கம் தெளிவடையாதென்று தீர்மானிக்கப்பட்டது

## நோயாளிகளுக்கு கிறிஸ்மஸ் விருந்து

ரக்வான், டிச. 25

கிறிஸ்மஸ் விழாவை முன்னிட்டு ரக்வான் ஆஸ்பத்திரி அலங்கரிக்கப்பட்டிருந்தது. நோயாளிகள்சகலருக்கும் வைத்திய அதிகாரி திரு. எஸ். பொன்னம்பலம் அவர்களால் கேக் பலகார பக்ஷண வகைகளும் நன்கொடைகளும் கொடுக்கப்பட்டன. [ந-நி]

## பகிரங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், டிச 3

வருமபுதன்கிழமை 31-12-4 பிற்பகல் 5 மணிக்கு சாவகச்சேரி டிறிபிக் கலாஸாரி மண்டபத்தில் ஓர் பகிரங்க கூட்டம் நடைபெறும்.

திருவாளர்கள் டபிள்யூ தகநாயகா, கே. கனகரத்தினம், வி. குமாரசுவாமி, எஸ் வன்னியசிங்கம், வி. எஸ். கார்த்திகேசு முதலியோர்கள் பேசுவார்கள்.

## இந்தியா செல்லும் இலங்கை டென்னிஸ் கோஷ்டி

கொழும்பு, டிச 29

சென்னையில் ஜனவரி 2-ம் தேதி தொடக்கும் நடக்கவிருக்கும் டெலிவிஸ் டந்தாட்டப் போட்டியை முன்னிட்டு இலங்கைக் கோஷ்டி விமான மூலம் ஜனவரி 2-ம் தேதி காலை புறப்பட்டுச் செல்லும் எனத் தெரிகிறது.

## விலைபோல் ஏறும் அமெரிக்க விலைவாசிகள்

### கட்டுப்படுத்தச் சட்டம் அங்கீகாரம்

வாஷிங்டன், டிச. 29

அமெரிக்காவில் நாணயச் செலாவணி வீக்கத்தால் விஷம்போல் ஏறிவரும் விலைவாசிகளைக் கட்டுப்படுத்த நிறைவேற்றப்பட்ட சட்டத்திற்கு ஜனாதிபதி ட்ரூமன் இன்று அங்கீகாரம் அளித்திருக்கிறார். இச்சட்டம் போதாதென்றும் இன்னும் கடுமையான சட்டம் ஏற்படுத்த வேண்டுமென்றும் குறிப்பிட்ட அவர் நேற்று காங்கிரஸில் பேசியபோது நவம்பர் 17-ம் தேதி தான் விசேஷ காங்கிரஸ் கூட்டத்தில் பேசிய சமயம் வாஷிங்டன் நகரில் ராத்தல் 88 சதமாக இருந்த வெண்ணெய் விலை இப்பொழுது ஒரு டாலர் 5 சதமாக ஏறிவிட்டது என்று தெரிவித்தார்.

## ஆசிய வாலிபர்கள் மகாநாடு

### பெப்ரவரி மாதம் கல்கத்தாவில் நடைபெறும்

பம்பாய், டிச. 28

தென்கிழக்கு ஆசியநாடுகளின் வாலிபர்கள் மகாநாடு பெப்ரவரி 15-ம் தேதிமுதல் 20-ம் தேதிவரை கல்கத்தாவில் நடைபெறும். இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு மகாநாட்டை ஆரம்பித்து வைப்பார். ஆசியாவில் பிரான்சுக்கும் ஹாலந்துக்குமிருந்து வரும் ஏகாதிபத்திய ஆதிக்கத்தை ஒழிப்பதற்காக நடைபெறும் போராட்டத்தை தடுப்படுத்தவே இம்மகாநாடு நடைபெறப் போவதாக இங்கு விஜயம் செய்திருக்கும் உலக ஜனநாயக வாலிபர் சம்மேளனப் பிரதிநிதி மிஸ் பெட்டி பூபாவும் சர்வதேச மாணவர் சம்மேளனப் பிரதிநிதி மிஸ் கார்மல் பிரிக்மனும் அறிவித்தனர். இம்மகாநாட்டுக்கு பர்மா, இலங்கை, மலேயா, இந்தோசைனா விட்நாம், சயாம், பிலிப்பைன் முதலிய ஆசிய நாடுகளிலிருந்து 200 பிரதிநிதிகள் விஜயம் செய்வார்கள். இந்தோனேஷிய புனருத்தாரணக்கிற்காக உலக ஜனநாயக வாலிபர் சம்மேளனம் அடுத்த மே மாதம் வைத்தியர்களையும் ஆசிரியர்களையும் அனுப்பி வைக்கும்.

## 25 கோடி ரூபாய்

### பாஸிஸ்தானுக்கு நிஜாமின் கடன் உதவி

புதுடில்லி. டிச. 28

பாகிஸ்தானுக்கு நிஜாம் மன்னர் 25 கோடி ரூபாய் கடன் கொடுத்துதவுவதாக லாகூரிலிருந்து வெளிவரும் 'பாகிஸ்தான் டைம்ஸ்' பத்திரிகை அறிவிக்கிறது.

## சீனக் கப்பலில் தீவிபத்து

### 500 பிரயாணிகள் நதியில் மூழ்கினர்

ஷாங்கை, டிச. 28

யாங்சே நதியில் சென்று கொண்டிருந்த வான்ஷங் என்ற சீனக் கப்பல் தீ விபத்திற்குள்ளாயிற்று ஹாங்கோ நகருக்கு ஏற்பட்ட இந்த விபத்தில் கப்பலிலிருந்த 700 பேர்களில் 500 பேர்கள் நதியில் மூழ்கி மாண்டனர். 70 பிரேதங்கள் கண்டெடுக்கப்பட்டன. மீதமுள்ளோர் மறுநாள் கரைக்கு கரையிலிருந்து 2 படகுகளையும் தாக்கிய பின் காணக்கப்பட்டது.

## சீன யுத்த நெருக்கடி

### குடியரசுத் தலைவர் தளபதிகள் ஆலோசனை

நாங்கிங், டிச. 28

சீனக் குடியரசுத் தலைவர் சியாங் கைஷேக் இன்று ஹாங்கௌ நகர் வந்து தளபதிகளைச் சந்தித்து ஆலோசனை செய்தார். மத்திய சீனத்திலும் ஷாங்ஹாயிலும் கம்யூனிஸ்ட் துருப்புகளின் கை ஓங்கி நிற்கிறமை மோசமாகி வருவதாகவும் அதைச் சமாளிக்க ஆலோசனை நடைபெற்றது.

## தோட்ட வரி விதிதம் அதிகரிக்கப்படும்

### ஜனவரியில் வரும் திருத்த பிரேரணை

கொழும்பு டிச 30

பாராளுமன்றத்தில் ஜனவரி முற்பகுதியில் தோட்ட வரிச் சட்டத்திற்கு வரும் ஓர் திருத்தப் பிரேரணையின் பிரகாரம் தோட்ட வரி விதிதம் உயர்த்தப்படலாம் எனத் தெரிகிறது.

இதன் பயனாக நாட்டின் வருமானம் 20 லட்சம் ரூபாயாக அதிகரிக்கும் எனவும் அறியப்படுகிறது.

## தவிட்டு மூடையுள் அரிசி

### அரிசி கடத்துவதற்கு நவீன உபாயம்

மட்டக்களப்பு, டிச. 26

தவிடு மூடைகள் என்று சொல்லிக் கடத்தப்பட்ட 13 மூடைகள், தகவல் கிடைத்த தன்பேரில் சோதனையிடப்பட்டன. அப்போது 20 புஷல் தவிடும் 14 புஷல் அரிசியும் அவற்றில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக ஒட்டுமாவடியைச் சேர்ந்த பி. வி. முகமது என்னும் கடைக்காரர் குற்றஞ்சாட்டப்பட்டார்.

விசாரணையில் வழக்கு ராஜிவாகாததால் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

## தல்பித்தாவில் பெண் கொலை

### எதிரி மறைந்து திரிகிறார்

கொழும்பு, டிச. 29

தல்பித்தாவில் ஒரு கொலைச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. இறந்தவரின் பெயர் மூ. பி. பொடிநோனா என்று தெரிகிறது. இச்சம்பவத்தின் காரணமாகச் சந்தேகிக்கப்படும் தல்பித்தாவைச் சேர்ந்த சேதரிஸ் தற்பொழுது தலை மறைவாகத் திரிந்து கொண்டிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது.

## விஸ்கி போலச் சுவைக்கும் சாராயம்

கொழும்பு, டிச 29

களுத்துறையைச் சேர்ந்த டி. ஏ. மெண்டிஸ் என்பவர் ஒரு புதுவகைச் சாராயத்தை தயாரித்து விற்று வந்ததாகத் தெரிகிறது. இதை சோடாவுடன் கலந்து அருந்பொழுது விஸ்கிபோலவே இருக்குமாம். அந்நிய குடிவகை விலை ஏற்றத்தின் காரணமாக இந்த "மெண்டிஸ் ஸ்பெஷல்" சீக்கிரம் மார்க்கெட்டுக்கு அதிகமாக வரும் என நம்பப்படுகிறது.

## 70 கோடி டாலர் நஷ்டம்

### அமெரிக்காவில் ஒரு வருடத்திய விபத்துகள்

நியூயார்க், டிச. 28

தீ முதலிய விபத்துக்களால் அமெரிக்காவில் 1947 வது வருடம் 70 கோடி டாலர் நஷ்டமேற்பட்டிருக்கிறது. யுத்த காலத்தில் ஜெர்மன் ஆகாய விமானங்கள் பிரிட்டன் மீது பொழிந்த வெடி குண்டுகளால் பிரிட்டனுக்கு இரண்டு வருடங்களில் ஏற்பட்ட நஷ்டத்தைவிட அமெரிக்காவில் ஒரு வருடகாலத்தில் தீ முதலிய விபத்துகளால் ஏற்பட்ட நஷ்டம் 30 கோடி டாலர் அதிகமாகும்.

## பம்பாயில் ஒரு நாள் வேலை நிறுத்தம்

### 5 லட்சம் தொழிலாளிகள்

பம்பாய், டிச. 28

பம்பாய் தொழிலாளர்கள் ஒரு நாள் பொது வேலை நிறுத்தம் செய்வதாகத் தீர்மானித்தபடி வேலை நிறுத்தம் நகரில் ஆரம்பமாயிற்று. கைத்தொழில் பிரதேசங்களைப் பாதுகாக்க ராணுவமும் போலீசும் நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஸ்ரங்கிரஸ் தலைவர்கள் வேண்டுகோளைப் புறக்கணித்து, சோஷியலிஸ்டுகள் கம்யூனிஸ்டுகள் தூண்டுதலின் பேரில் இவ்வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. 5 லட்சம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்கிறார்கள். இன்று பம்பாய் ஸ்தம்பிதநிலையிலிருக்கும்.

## 1815-ம் வருட ஒப்பந்தத்தை பிரிட்டிஷார் கௌரவிக்கவில்லையாம்

### பேராசிரியர் பௌத்த சங்கத்தில் பேச்சு

கொழும்பு, டிச 29

சென்ற ஞாயிற்றுக்கிழமை மாதறை முஹாலவிதியாலயத்தில் நடைபெற்ற அகில இலங்கைப் பௌத்த காங்கிரஸின் 29-வது வருடாந்த விழாவிற்கு டாக்டர் ஜி. பி. மலாலசேகரா தலைமை வகித்துப் பேசியபோது சென்ற இரண்டொரு வருடங்களாகத் தாம் பௌத்த காங்கிரஸின் சார்பாக உலகத்திலுள்ள அநேக பௌத்த சங்கங்களுடன் இலங்கையில் ஒரு அகில உலக பௌத்தர்கள் மகாநாடு ஏற்படுத்திக் கொள்ளுவது சம்பந்தமாகக் கடிதப் போக்கு வைத்துக் கொண்டதாகவும் அப்படியான ஒரு மகாநாடு 1950-ம் ஆண்டில் நடத்திக் கொள்ள முடியும் என்றும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து டாக்டர் மலாலசேகரா கூறியதாவது:-

"சென்ற 500 வருடங்களாக இலங்கையின் கடலோரப் பட்டணங்கள் அந்நியர் ஆட்சிக்குட்பட்டிருந்தது இலங்கையே முற்றாக ஒன்றரை நூற்றாண்டுகளாக தனது சுதந்திரத்தை இழந்திருந்தது உலகத்திலுள்ள சுதந்திர நாடுகளுடன் இலங்கை மீண்டும் தன் உயர்த்திப் பெருமையுடன் நிற்கக் கூடிய முறையில் இப்பொழுது நமக்குச் சுதந்திரம் கிடைக்கவிருக்கின்றது.

இருபத்து நான்கு நூற்றாண்டுகளாக சிங்கள சாதியினர் பௌத்த சமயத்தைப் போற்றி வந்திருக்கின்றனர். ஆனால் சென்ற சில காலங்களாக பௌத்த சங்கங்களின் நிலபுலங்களும் மற்றும் பொருட்களும் அந்நியர்களால் பறிக்கப்பட்டன. பௌத்த கோவில்கள் இருந்த இடங்களில் கிறிஸ்தவ கோவில்கள் கட்டப்பட்டன. பாதிரிமாருக்கு அரசாங்கம் அலவன்சுகள் கொடுத்து கிறிஸ்தவ வேதம் பரப்பப்பட்டது.

இந்த வெட்கக் கேடான முறையில்தான் 1815-ம் ஆண்டு பிரிட்டிஷார் கண்டியில் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் ஐந்தாவது பிரிவை பிரிட்டிஷார் கௌரவித்தார்கள்.

இந்த மானக்கேடான ஒப்பந்தக் கடுதாசிகள் பார்வையிடத்தானிருக்கின்றனவல்லாமல் அச்சிட்டு வெளிப்படுத்த முடியாது.

தம் வாக்குறுதியைக் காப்பாற்றாத அந்த பிரிட்டிஷ் அதிகாரிகளின் சந்ததியாராகிய இன்றைய வல்லரசுடன் சமீபத்தில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களை மக்கள் சமூகத்துடன் நோக்குவதில் எவ்வித ஆச்சரியமுமில்லை

மேலும் பேராசிரியர் மலாலசேகரா கூறியதாவது:-

"நான் இப்பனழய சம்பவங்களை ஞாபகமூட்டியது பகையையும் கோபத்தையும் மூட்டுவதற்கல்ல. ஆனால் செய்த தீமைகளை ஒழிப்பதற்காகவேயாகும்.

பௌத்தர்கள் தங்களுக்கு அந்நியர்கள் செய்த தீமைகளை அகற்றுமாறு ஒரே குரலுடன் வேண்டிக்கொள்ள வேணடும்.

எங்களுக்கு இலவசக் கல்வி அளித்த டாக்டர் கன்னங்கரா இன்று அரசியலிலிருந்து சதிகாரர்களால் ஒதுக்கப்பட்டுவிட்டார். அவருடைய இலவசக் கல்வி திட்டத்திற்கும் இந்த சதிகாரர்கள் உலை வைத்து விடுவார்களோ என்று நாம் அஞ்ச வேண்டியிருக்கிறது.

புதிய மந்திரி சபையினர் இலவசக் கல்விக் கொள்கையை அடிப்படையாக வைத்திருப்போமெனக் கூறுகிறார்கள். ஆனால் வாய்ப் பேச்சில் நம்பிக்கை வைக்க முடியுமா? மந்திரி சபையில் முக்கியஸ்தர்கள் சிலருக்கு இரகசிய வாக்குறுதிகள் கொடுத்திருக்கிறார்கள் என்பதாகக் கேள்வி மத்திய கல்லூரிகள் ஸ்தாபிக்கப்படுவது கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது இனனும் அநேக பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டால்தான் பொதுஜனங்களுக்குப் போதிய உயர்தர கல்வி யூட்ட வசதியாக இருக்கும்.

மத ஸ்தாபனங்களுக்கு அரசாங்க உதவி அளிக்கப்பட வேண்டும்."

## மார்க்கெட் நிலவரம்

### தங்கம் வெள்ளி விலை

கொழும்பு, டிச. 30

| | | ரூ. ச. |
|---|---|---|
| தங்கப்பவுன் விற்கும் விலை | | 70-00 |
| அரைப் பவுன் | " | 40-00 |
| வெள்ளி [நூறு ரூபாய் கொண்ட எடை] | " | 185-00 |

**ரப்பர்**

| | | | |
|---|---|---|---|
| கிரேப் நம் 1 | ராத்தல் | | 00-81½ |
| சீட் நம். 1 | " | | 00-55 |

**தேயிலை**

| | | |
|---|---|---|
| நம். 1 தரம் | ராத்தல் | 1-85 |
| " 2 " | " | 1-64 |
| " 3 " | " | 1-55 |

**கொக்கோ**

| | | |
|---|---|---|
| நம். 1 | ராத்தல் | 00-95 |
| " 2 | " | 00-85 |
| " 3 | " | 00-70 |

**தேங்காய் எண்ணெய்**

| | |
|---|---|
| டன் ஒன்றுக்கு | 849-25 |
| 100 ராத்தல் கொண்ட கன்டி 1க்கு | 42-47 |
| **தேங்காய்ப் புண்ணாக்கு** | |
| டன் ஒன்றுக்கு | 82 50 |

## ஏழு பிள்ளைகளின் தகப்பன் சுட்டுக் கொலை

பாரிஸ், டிச, 27

தென்மேற்கு பிரான்ஸில் உள்ள டிஸசையிர் என்னுமிடத்தில் நேற்றிரவு ரெனி செளலார்ட் என்பவரை அடியில் உள்ளவர் ஒருவர் சுட்டுக் கொன்றுவிட்டார். கொலையுண்ட ரெனி செளலார்ட் என்பவருக்கு ஏழு பிள்ளைகளென்றும் இவரது வீட்டு ரேடியோ காரணமாக சுட்டவர் தயில்கொள்வது கஷ்டமாக இருந்ததென்றும் அதனால்தான் அவர் இவரைச் சுட்டுக் கொன்றதாகவும் கூறப்படுகிறது. போலிசார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.


**விவேக அறிவுப் போட்டி நிர். 11.**

பொங்கற் பரிசு ரூபா 3000-00

முடிவு தேதி 8-1-48.

மொத்தம் 14 போனஸ பரிசுகள்!

பிரவேசக் கட்டணத்தில் விசேஷ சலுகை!!

ஒரே கவரில் அதிக கூப்பன்கள் அனுப்புபவர்களுக்கு அரியதோர் சந்தர்ப்பம்!!!

விபரங்கட்கு:-

ஸ்ரீ லங்கா மனுவாக்சரிங் கம்பெனி லிமிற்றெட்,

கோட்டை ரோட், பருத்தித்துறை P. O.



**ஆலோசனை இனாம்!**

தங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி. எவ்வளவு நாட்பட்டதாயினும் சரி, எங்களுக்கு விபரமாக எழுதியனுப்புங்கள். எமது ஆயுள் தலைமை வைத்தியரிடம் கலந்து ஆலோசித்து தகுந்த மருந்தினைத் தீர்மானித்து விலையையும் தெரிவிக்கிறோம்.

சென்ற 20 வருடங்களாக எம்மிடம் மருந்து சாப்பிட்டு ஆயிரக்கணக்கான நண்பர்கள் சுகமடைந்திருக்கிறார்கள்.

கேட்டால் இனாம்.

தண்டபாணி வைத்தியசாலை,

நயினாதீவு தெ. 1. பெரியகடை வீதி. பழனி. (S. I.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ரவீந்திரர், காந்திஜி ஆகியோரை பின்பற்றி தெய்வாம்ச மடையுங்கள்"

## விசுவ பாரதி பட்டமளிப்பு விழாவில் ஸ்ரீமதி ஸரோஜினியின் தலைமையுரை

## "ஒரே உலக ஆதர்சத்தைக் கண்டறிந்த உலக குரு தாகூர்"

-டாக்டர் ஹோம்ஸ்

## "சத்தியம், சாந்தி ஆகியவைகளே இந்தியப் பண்பாட்டின் ஜீவன்"

-ராஜாஜி

சாந்திநிகேதனம், டிச. 27

"உலக விவகாரங்கள், உலகசட்டங்கள் இவைகளின் போக்கை அனுசரித்து நாம் நம்மை வளர்த்துக்கொள்ள வேண்டும்" என்று டாக்டர் ரவீந்திரநாத் தாகூரின் சர்வதேச சாவலாசாலையாகிய விசுவபாரதி பட்டமளிப்பு விழாவுக்குத் தலைமை வகித்து இன்று பேசுகையில், ஐக்கிய மாகாண கவர்னர் ஸ்ரீமதி சரோஜினி தேவி கூறினார்.

"மாணவர்களும் ஆசிரியர்களும் வளர்மட்டர்களுமாக ஏராளமான பேர்கள் இவ்விழா நடைபெற்ற மாந்தோப்பில் கூடியிருந்தனர்.

இப்பொழுது நடைபெற்ற கலகங்களைப்பற்றிக் குறிப்பிடுகையில் அவைகள் இயற்கைக்கான விளைவுகள் அல்லவென்றும், திடீரென ஏற்பட்ட சம்பவங்களுதான் என்றும் இதற்காக நாம் நம்மை இழந்து கொள்ளவேண்டியது அவசியமில்லையென்றும் அவர் கூறினார்.

"உங்களைச் சுற்றி பரவி இருக்கும் கேடுகளிலிருந்து விலகி நின்று முனனேறுங்கள். நாம் ஒரு நவ உலகை சிருஷ்டிக்க வேண்டும்" என்று அவர் புத்தாய் வெளியேறும் இவ்வாண்டுதிய விதியார்த்திகளுக்கு (கிராடியூவேட்ஸ்) புதுமதி கூறினார்.

### காந்திஜி—தாகூர் இலட்சியங்கள்

மேலும் அவர் தொடர்ந்து கூறியதாவது:-

ரவீந்திரர், காந்திஜி ஆகியோரடைய உபதேசங்களைப் பின்பற்றி சாதாரண மனிதவர்க்கத்துக்குள்ள பீதி முதலியவைகளை ஒழித்துவிட்டு ஈஸ்வராபயம் பொருந்தியவர்களாக ஆகவேண்டும். அது மாத்திரமன்றி அந்த கலாச்சாரத்தை இந்தியாவில் மட்டுமின்றி சகல உலகத்துக்குமே பரப்பவேண்டும்.

சுதந்திர இந்தியாவில் நான் விரும்பியபடி நான் பேசவில்லை என்பது குறிதது வருந்துகிறேன், இன்னமும் நம் கண்ணுக்குத் தெரியாத ஒரு சுதந்திரத்தின் முன் அறிகுறியாயிருக்கும் ஓர் கொடியின் கீழேதான் நாம் இப்பொழுது பேசுகிறோம், இந்த சுதந்திரத்தையடைய ஒவ்வொருவரும் உழைக்கவேண்டும்.

நான் அநேக சர்வகலாசாலைகளுக்கு விஜயம் செய்திருக்கிறேன் ஓரிடத்திலாவது மாணவர்கள் பெற்றுக்கொண்ட அறிவு, அவர்களது குணம், நடையுடை, பண்பாடு, இவைகளில் கிரியாம்சையில் பயன்படுத்தப்பட்டிருப்பதை நான் கண்டுகொள்ள முடியவில்லை. தாகூர்போன்ற மனிதர்களான ஆத்மாவின் ஈஸ்வரத்தன்மையை ஆதர்சனமாகக் காணமுடிகிறது. மனிதன் கடவுளாவதே அவனது கடமையென்பதை காந்திஜி அறிந்தார். எவ்விதக் கட்டுப்பாடுமில்லாமலிருந்தால்தான் உண்மையான சுதந்திர மிருப்பதாகக்கொள்ள முடியும்.

இந்தியாவின் பழம் பெருமையைப்பற்றி நாம் புழங்கிக் கொண்டிருந்தால் போதாது இந்திய வீடுதலை என்ற மறுமலர்ச்சியை நீங்கள் சிருஷ்டிக்க வேண்டும்.

### ராஜாஜி பிரசங்கம்

மேற்கு வங்கக் கவர்னர் மாணவர்களிடையே அக்கூட்டத்தில் பேசுகையில் பிரின்ஸ்பால் க்ஷிதிமோஹன்சென் சற்று முன் பேசும்பொழுது மேற்கோளாக எடுத்துக்காட்டிய உபநிஷத சுலோகங்களில் கூறப்படியுருக்கும் புராதிமந்களின் படி நடக்கவேண்டுமென்று வற்புறுத்தினார்.

கவியரசர் ரவீந்திரர் அவர்களுக்காக ஓர் வாழ்க்கை நியதி நிர்மாணித்து வைத்திருக்கிறார் என்றும் அதன்படியே அவர்கள் நடந்துகொண்டு மற்றவர்களையும் அதுபோல் நடக்கும்படி செய்ய வேண்டுமென்றும் அவர் மேலும் எடுத்துக்காட்டினார்.

விசுவபாரதி ஓர் சாந்தி அலயம் என்றும் சாலதேசங்களின் இணைப்புக் கோர்வையான ஸ்தாபனம் என்றும் அவர் புகழ்ந்தார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசியதாவது:- நாம் மிகவும் கஷ்டமான காலத்தில் இருக்கிறோம். பல்வேறு விதமான கலாசாரங்களும் நம் மீது மோதுகின்றன. இதற்கிடையில் நமதுடைய இந்திய கலாசாரமாகிய சத்தியம், சாந்தி இவைகளை கைவிடாமல் நடத்திக்கொண்டு போகத் தீர்மானித்திருக்கவேண்டும். ஆதிகால விஷயங்களை நமதுடைய நலனுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது. தற்கால உலகப் போக்குக்குத் தகுந்தாற்போல் நாம் புதிய வழிகளை அமைத்துக் கொள்ள வேண்டும். நாம் ஸமஸ்கிருதப் பாறறுகொள்ள முயற்சிக்க வேண்டும். ஆனால் நம்மால் ஆதிகால ரிஷிகள் பேசிய பாஷையை பேசமுடியாது. அகவே நம்முடைய பிரச்னை மிகவும் கடினமானது. இக்கஷ்ட நிலை நீங்கவேண்டுமெனில் தாங்கிக்கொண்டு, நம் சமுதாயமிருக்கக்கூடிய ஒரு சமரச தத்துவத்துக்கு லாயக்காயிருக்கும்படி நாம் நம்மை பண்படுத்திக் கொள்ளவேண்டும். இந்த சமரச தத்துவ சித்தாந்தமாயதையும் நிர்ப்பந்திப்பதாய் இருக்கக்கூடாது.

### ஹோம்ஸ பிரசங்கம்

வாட்டு மல்லிதானப் பேராசிரியர் டாக்டர் ஜே. எச். ஹோம்ஸ் அவரது பட்டமளிப்பு விழாப் பிரசங்கத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:-

ரவீந்திர நாத தாகூர் ஓர் உலக குரு. அவர் முடிவிலா முடிவைக் கண்ட ஓர் மனிதர். எல்லாவற்றையும் அப் பிரமாண்டத்தின் அடிப்படையிலேயே வளர்த்து வந்தார். அந்த நோக்கிலிருந்து கவனிக்கும்பொழுது மனிதன் ஓர் துரும்பாகவே மதிக்கப்படுவதற்குரியவன். ஆத்மாவின் தன்மையைப் பற்றி நிச்சயமாய் பேசியவர்களில் அவர் ஒருவர்.

கிழக்கு, மேற்கு நாடுகள் ஒருங்கே சேர்க்கப்படவேண்டுமென்று அவர் உணர்ந்தார். ஒரே உலகந்தான் அவரது ஆதர்சம், அவரது ஆத்மா அதை உணர்ந்துகொள்ள முடிந்து விட்டதால் அதே மாதிரி மற்றவரும் ஏன் உணரக்கூடாது என்பது அவரது கேள்வி.

ஏகாதிபத்தியம் ராணுவ ஆட்சி ஆகியவைகளின் கொடுமைகள் பற்றி அவர் எச்சரிக்கை செய்திருக்கிறார். இவைகளிலையிலும், இலக்கியத்திலும் மனிதனுக்கு மனிதன் விரோதியாகவுமிலை. அவைகளில் ஒற்றுமையும் சாந்தியும் தானிருக்கின்றன. கலாசாரம் கட்டுப்பாடுகளுக்குட்பட்டதல்ல. ஒவ்வொரு மனிதனுடைய பண்பாடு மனித சமூக கலாசாரத்தில் ஒரு பகுதியாகும். தாகூர் அவருடைய கடைசி நாடகங்களில் ஓ புண்ணிய தீர்த்த யாத்திரீகன் போலவும் ஓர் தேவதூதன் போலவும் வந்து வந்தார்.

உலக கலாசாரத்துக்காக அவர் உலகமுழுவதும், சுற்றுப் பிரயாணம் செய்தும், அவரது செய்தியை உலகம்புறக்கணித்து விட்டதால், யுத்தத்தில் தவிடு பொடியாகவேண்டியதாயிற்று.

## பாகான வீடுகட்டும் கமிட்டி 5 வருஷ திட்டம் யாதாஸது

### முதல் வருஷத்தில் 17000 வீடுகள் கட்டப்பட வேண்டுமாம்

சென்னை, டிச. 26

சென்னை சர்க்காரால் நியமிக்கப்பட்ட மாகாண வீடுகட்டும் கமிட்டி தனது வருஷ திட்ட சிபார்சை சர்க்காருக்குச் சமர்ப்பித்திருக்கிறது. அதில் நகரத்தில் ரூ 5,000மும் வெளியூர்களில் ரூ. 3500 செலவிலும் (பணி உள்பட) வீடுகள் கட்டச் சிபார்சு செய்திருக்கிறது. திட்டத்தின்படி முதல் வருஷத்தில் 17000 வீடுகள் கட்டியாக வேண்டும்.

முதலில் மாதமொன்றுக்கு ரூ 200க்கு குறைந்து சம்பளம் வாங்குகிறவர்களுக்கு மாதர் கட்டப்படும் வீடுகள் கிடைக்கும்படி சர்க்கார் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கமிட்டி கூறுகிறது.

கமிட்டிக்கு மாஜி பிரதம என்ஜினீயர் திவான் பகதூர் எல். வெங்கட கிருஷ்ண அய்யர் தலைவர்.

## ஆசியா பொருளாதார கமிஷன்

### அடுத்த கூட்டம் இந்தியாவில் நடைபெறும்

கல்கத்தா, டிச. 25

ஆசியா, தூரகிழக்கு நாடுகள் பொருளாதார கமிஷனின் அடுத்த கூட்டத்தை மே மாதத்தில் ஏதோ ஓர் தேதியில் இந்தியாவில் நடத்துமாறு இந்திய சர்க்கார் கோரியிருப்பதாக அதே கமிஷனின் காரியதரிசி டாக்டர் பி. எஸ். லோகநாதன் நேற்று கல்கத்தா ரேடியோவில் பேசுகையில் தெரிவித்தார். ஆசியா பிராந்தியத்தில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதான அதே கமிஷனரின் நோக்கம் எனறும், இப்பகுதிகளில் உணவுப்பஞ்சத்தை நிவிர்த்தியை உடனடியாக அகிவிருத்தி செய்வதாக வேண்டியிருக்கிறது எனறும் அவர் குறிப்பிட்டார்.

## பர்மாவாழ் இந்தியர் அரசியலில் பர்மியர்களாகி விடவேண்டும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னும் ஆசனத்தை இந்தியா அரசாங்கத்தின் சார்பாக இந்திய கவர்னர் ஜெனரல் லார்டு பவுண்ட்பேட்டன் புதுடில்லியிலுள்ள பர்மா ஹைகமிஷனரிடம் கொடுப்பார். பர்மா அரசாங்கத்தின் சார்பாக பர்மா ஹைகமிஷனர் அதைப் பெறுகிறார். சென்ற நூறாண்டின் பிற்பகுதியில் பர்மா இந்தியாவுடன் இணைக்கப்பட்டபோது அந்த ஆசனம் மண்டலேயிலிருந்து இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டது.

பர்மா சுதந்திரமடைந்ததை பற்றி இந்தியா தனது மகிழ்ச்சியை தெரிவிக்கமுடிகிறதான அந்த பழைய ஞாபகச் சின்னம் இப்பொழுது பர்மாவுக்குப் பரிசாக அளிக்கப்படும் பிரிட்டனிடமிருக்கும் பர்மாவின் பூர்வீகப் பொருட்களை திருப்பிக் கொடுக்கும்படி அப்பொருட்களின் பட்டியல் ஒன்றைப் பர்மா அரசாங்கம் பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் சமர்ப்பித்திருக்கிறது. அவை இப்பொழுது லண்டன் பொருட்காட்சிசாலையிலிருக்கின்றன.

### அரசர் சந்ததி அதிக மான்யம் கோருகிறது

ரங்கூன், டிச. 27

மறைந்துபோன பர்மா கடைசி மன்னரின் சந்ததியார் தங்களுக்கு அதிகமான மான்யம் வேண்டுமென்று கோரி இன்று பிரதம மந்திரி தக்கின் நூவைப் பேட்டிகண்டு கேட்டனர். அதை அனுதாபத்துடன் கவனிப்பதாக பிரதம மந்திரி வாக்களித்தார். தீபாமனார் சந்ததியாரில் இப்பொழுதுள்ளவர்களில் அதிக வயதுடையவர். பின்மனு இளவரசர் எனப்படும் 73 வயதுடையவயோதிகர். பர்மாவின் கடைசி மன்னர் தீபா மண்டலேயில் அரசுபுரிந்து வந்தார். அவர் இந்தியாவுக்கு தேசப் பிரவேசம் செய்யப்பட்டு இந்தியாவில் மரணமானார்.

## "ஒரே உலக ஆதர்சத்தைக் கண்டறிந்த உலக குரு தாகூர்"

-டாக்டர் ஹோம்ஸ்

## "சத்தியம், சாந்தி ஆகியவைகளே இந்தியப் பண்பாட்டின் ஜீவன்"

-ராஜாஜி

## கவர்னர்-பிரதமர் பதவிகள்

### மூலவர்-உற்சவர் உதாரணம்

### ராஜாஜியின் வர்ணனை

கல்கத்தா, டிச. 26

மேற்கு வங்கப் பிரதமர் டாக்டர் பி. ஸி. கோஷின் தேர்தல் தொகுதியான ஸுக்கு கவர்னர் ஸி. ராஜகோபாலாச்சாரியார் சென்றிருந்தபொழுது அவருக்கு அங்கே அளிக்கப்பட்ட வரவேற்புக்குப் பதிலளிக்கும்பொழுது அவர் பேசியதாவது:

கவர்னரும் பிரதமரும் கோயிலில் மூலவர் உற்சவர்போல் பதவி வகித்து மாகாண நிர்வாகத்தை நடத்துகிறார்கள். மூலவர் ஒரே ஸ்தானத்தில் அசையாமல் இருப்பினும் அந்த வக்ரகத்தக்குச் சகல மரியாதைகளும் செய்யப்படுகின்றன. உற்சவர் திருவீதி உலாவ வரும்பொழுது மக்கள் உற்சாகமாக அவரிடம் தங்களுக்குள்ள பக்தியைத் தெரிவிக்கிறார்கள்.

அதேபோல ஸுரி மக்கள் பிரதமர் கோஷுக்குத் தங்கள் அன்பையும் கவர்னராகிய எனக்கு மரியாதையையும் செலுத்தியிருக்கிறார்கள்.

### தாயும் தகப்பனும்

மற்றொரு வரவேற்புக்கு பதில் அளிக்கையில் ராஜாஜி மூலவர்-உற்சவர் உதாரணத்தை தாயும் தகப்பனுமாக மாற்றிப் பேசினார்.

'இதுவரை மாகாண கவர்னர் கோபமுள்ள தகப்பனாரைப்போல் நிர்வாகம் செய்துவந்தார் அனால் சுதந்திரம் வந்த பிறகு மாகாண கவர்னர் தாய் போலவும் பிரதமர் தகப்பனார் போலவும் மாறிவிட்டார்கள் அகையால் உங்கள் குறைகளை தகப்பனாரான பிரதமரிடம் நீங்கள் தெரிவிக்கவேண்டும்' என்று ராஜாஜி பேசினார்.

### ஹிந்துஸ்தானி சர்க்கார்

ஆங்கில சர்க்கார் இப்பொழுது ஹிந்துஸ்தானி சர்க்காராக மாறிவிட்டபடியால் எல்லாரும் ஹிந்துஸ்தானி கற்கவேண்டுமென்று ராஜாஜி வற்புறுத்தினார்.

'மேற்கு வங்கம் வகுப்புவாத ஒற்றுமையைக் கடைப்பிடித்திருக்கிறது இப்படிப்பட்ட மாகாணத்துக்கு நான் கவர்னராக இருப்பதற்கு பொறுமை அடைகிறேன்' என்றார் ராஜாஜி.

மேற்கு வங்க கவர்னர் ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியார் தமது மனைவியுடன் வெள்ளிக்கிழமை கல்கத்தா திரும்பினார்.

## நிஜாம் சட்டசபையிலிருந்து வன பர்தி ராஜா ராஜினாமா

### சர்க்கார் கொள்கை பிடிக்காததே காரணமாம்

சென்னை, டிச. 26

நிஜாமின் சிற்றரசரும், வன பர்தி ராஜா ஸாகேபுமான ஸ்ரீ ராமேஸ்வர் ராவ், ஹைதராபாத் சர்க்காரின் தற்பொழுதைய கொள்கையை எதிர்த்து ஹைதராபாத் சட்டசபையிலிருந்து தமது அங்கத்தினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டார் என்று நம்பகமாகத் தெரிகிறது.

ஸ்ரீ ராஜாஸாகேப் அசெம்பிளி தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் பிரஜா உரிமையை ஸ்தாபிக்கவும் பெரும்பான்மையான மெஜாரிட்டி ஜனங்களின் கோரிக்கையை ஆதரிக்கவும் இதை பிரயோஜனப்படுத்திக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் தாம் சட்டசபையில் சேர்ந்ததாகவும் ஆனால் உண்மை அபிவிருத்திக்கு இடமில்லை என்பதை சட்டசபை ரூபித்துவிட்டதென்றும் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது.

## பர்மா மந்திரிகள் சொலை

### 7 லக்ஷம் ரூபாய் குடும்ப நிவாரணம்

ரங்கூன், டிச 27

பிரதமர் ஊ ஆங்ஸானும் மற்றும் 6 மந்திரிகளும் கொலையுண்டது சம்பந்தமாக அவர்களது குடும்பத்துக்கு உதவி செய்வதற்காகப் பர்மா சர்க்கார் 7 லக்ஷம் ரூபாய் அனுமதித்திருக்கிறார்கள்.

## கமியூனிஸத்திற்கு எதிர்ப்பு

### துருக்கி மாணவர் ஆர்ப்பாட்டம்

அங்காரா, டிச. 27

துருக்கியில் கமியூனிஸம் பரவுவதையும் அந்நிய நாட்டினர் தலையிடுவதையும் ஆட்சேபித்து துருக்கியில் ஆர்ப்பாட்டப் நடத்திய மாணவர் கூட்டத்தை போலிஸார் வந்து கலைக்கும்படி நேரிட்டது.

## பாலஸதீனப் போராட்டம்

ஜெருசலேம், டிச. 27

டிசம்பர் முதல்தேதி இதுவரை பாலஸ்தீன கலகங்களில் 316 அராபியர், யூதர், பிரிட்டிஷார் மாண்டனர் மத்திய பாலஸ்தீனத்தில் இன்று யூதர்-அராபியர் கலகம் நிகழ்ந்தது. அராபியர்கள் ரயில் வண்டிகளை நிறுத்தி உணவு பொருட்களைக் கொள்ளையிட்டனர். ஜெருசலேமிலும் ஹைபாவிலும் நேற்றிரவு கலகங்கள் நடைபெற்றன.

## ரங்கூன் பிரிட்டிஷ் நீதிபதிகள்

### சுதந்திரம் வந்ததும் விலகுகிறார்கள்

ரங்கூன், டிச. 26

பர்மா சுதந்திரச் சட்டம் அமுலுக்கு வந்ததும் ரங்கூன் ஹைகோர்ட், சுப்ரீம் கோர்ட்டாகிறது அதில் உள்ள பிரிட்டிஷ் நீதிபதிகள் ராஜிநாமாச் செய்து விலகுகிறார்கள்.

## சீனத்தின் புதிய அரசியல் திட்டம்

### சர்வாதிகார ஆட்சி என்கிறது ரஷ்யா

மாஸ்கோ, டிச. 27

புதிய சீன அரசியல் திட்டத்தின்படி கம்யூனிஸ்ட் கட்சிக்கு சர்வாதிகாரம் ஏற்படுமென்றும் சீனம் அமெரிக்க குடியேற்ற நாடாகுமென்றும் மாஸ்கோ விமர்சகர்கள் அறிவிக்கிறார்கள்


தேவை

பிரசித்திபெற்ற இந்திய மருந்துச் சாலைக்கு கொழும்பு நகருக்கு மட்டும் ஒரு சோல ஏஜெண்டு தேவை. ரூ 2000/- ரொக்க டிபாசிட் கட்டக் கூடியவர்கள் மட்டும் எழுதவும்.

C/o சுதந்திரன்,
194A, தட்டாரத் தெரு, கொழும்பு.

உலகப்பிரசித்தி பெற்ற

டி.எஸ். கம்பெனி கிளிமார்க் பீடிகளை உபயோகியுங்கள்

D. S. SONS. MUKKUDAL.

OUR CEYLON REPRESENTATIVE

ஆர். குசலவசேட்

91, மேட்டுத் தெரு, கொழும்பு.



துயரம் கொண்டு துன்புறுதீர்கள்

சிர நேத்திராஞ்சனத் தைலம்

வைத்திய நிபுணர் திரு. R. E. W. யோகரெட்னம்
(L. A M; M. C. P. & S (Cal) யாழ்ப்பாணம் எழுதுவதாவது:

"சிரநேத்திராஞ்சன தைலம்" பலவருட காலமாக அனுபவமும் பெயரும் பெற்றுவிளங்கும் M. K. ஜெகநாதன் கண் வைத்தியரால் தயாரிக்கப்பட்டுள்ளது. இது சிரசு, கண் சம்பந்தமான சகல ரோகங்களுக்கும் போதிய சுகம் கொடுக்கக் கூடியவாய்ந்தது என்பதை எனது மனமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சிர நேத்திராஞ்சனத் தைலம்

கண் புகைச்சல், குத்து, கூச்சம், மாலைக்கண், சிவப்பு முதலிய கண் சம்பந்தமான சகல ரோகங்களையும், தும்மல், நீர் வடிதல் முதலிய பீனிச வகைகளையும், கபால இடி, தலைவலி, மயக்கம், இருமல், இளைப்பு, நரம்புத் தளர்ச்சி, மூலச்சூடு ஆகிய ரோகங்களையும் நிவிர்த்தி செய்து, குளிர்ச்சியையும், ஞாபக சக்தியையும் கொடுக்கும். அஸ்மா, காசம், நீரழிவுக்கும் ஓரளவு சுகங்கொடுக்கும். காலம் நீடித்த நோயாளர்கள் நேரிலும் கடிதமூலமும் விபரம் தெரிந்துகொள்ளலாம்.

விலாசம் ஆங்கிலத் தில் தெளிவாய் எழுதுக.

2 அவுன்ஸ் சீசா ரூ. 3-25

4 அவுன்ஸ் சீசா ரூ. 5-50



கிங்ஸ்லியில் தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

என். எஸ. கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வாதன், எம். எஸ. சரோஜினி, எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம் ஆகியோர் திறம்பட நடிக்கும்

கன்னிகா

மகத்தான 7-வது வாரம்

பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர் நடனங்கள், செவிக்கினிய கீதங்கள், கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங்கவரும் உயரிய நடிப்புடன் நிறைந்தது.

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோடு, மருதானை.

தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும், சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

சித்ரகலாவின் உன்னத தயாரிப்பு

முதல் நம்பர் நடிகர்கள் எடிஜெயமான, ருக்மணி தேவி மற்றும் பலர் நடிக்கும்

'இழந்த உறுதி'

என்னும் வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப் படம்

புதிய இயந்திர அமைப்புகளுடன் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!


சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் டிசம்பர் மாதம் 30-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கூடத்தில் அச்சிட்டு கொழும்பு மெயின்ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org